இலக்கு
GLOBAL TAMIL MEDIA CENTRE
வாராந்த மின்னிதழ்
அனைத்துலக தமிழ் ஊடக மையம்
Ilakku2009@gmail.com www.facebook.com/ilakkutamilnews https://twitter.com/Ilakku1
இதழ் 248 | சனி, ஆகஸ்ட் 19, 2023 | 12 பக்கங்கள்



# தொடர்ந்து வரும் சீனக் கப்பல்கள்; டில்லி என்ன செய்யப்போகின்றது?

அகிலன்



# நெடுங்கேணி சீனித் தொழிற்சாலை தமிழ் மக்களுக்கு மிக ஆபத்தானது

துரைராஜா ரவிகரன் செவ்வி


© 2023 இலக்கு இணையம்

# தாயகத்தின் தலைசிறந்த பாடகர் குமாரசுவாமி அவர்கள் காலமானார்



தாயகஉணர்வாளரும்ஈழத்தின் தலைசிறந்த பாடகருமான திரு குமாரசுவாமி (வரதன் ஆசிரியர்) அவர்கள்16.08.2023 காலமானார். பூத்தகொடி பூக்கள் இன்றி தவிக்கின்றது என்ற மக்கள் மனங்களை வென்ற பாடல் உட்பட பல தாயகப் பாடல்களை பாடி உள்ளார். தெடுத்தனை கரவெட்டி கிழக்கைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இந்தியா சீர்காழி கோவிந்தராஜனின் மாணவனும், கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் முன்னாள் ஆசிரியரும் கோப்பாய் ஆசிரியர் கலாசாலை விரிவுரையாளரும் மூத்த விநாயகர் கோயில் பக்தி பாடல்கள் பாடியவருமான மதிப்பிற்குரிய குமாரசாமி (வரதன்) ஆசிரியர் அவர்களுக்கு இலக்கும் மானசீகமான வணக்கத்தை தெரிவித்துக் கொள்கின்றது.

# துணைவேந்தராக பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மீண்டும் நியமனம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகப் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

எதிர்வரும் 24 ஆம் திகதி முதல் அடுத்து வரும் மூன்று ஆண்டுகளுக்குச் செயற்படும் வகையில் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீண்டும் அப்பதவிக்கு நியமித்துள்ளார் என ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அடுத்த துணைவேந்தர் பதவிக்காக விண்ணப்பித்திருந்த நான்கு பேரில், திறமைப் புள்ளி அடிப்படையில் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஷ்ட பேராசிரியர் ரி.வேல்நம்பி, பேராசிரியர் செ.கண்ணதாசன் ஆகியோர் பேரவையினால் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களது பெயர்கள் ஜனாதிபதியின் தெரிவுக்காக அனுப்பிவைக்கப்பட்டிருந்தன.

தற்போதைய துணைவேந்தரின் பதவிக் காலம் எதிர்வரும் ஆகஸ்ட் மாதம் 28 ஆம் திகதியுடன் நிறைவடையவுள்ளதால் அடுத்த துணைவேந்தர் தெரிவு இடம்பெற்றது. மீண்டும் தெரிவாகியுள்ள பேராசிரியர் சிறிசற்குணராஜா மேலும் மூன்று வருடங்களுக்கு பதவி வகிப்பார்.

# 13 ஐப் பயன்படுத்தி மொட்டு கட்சியினருக்கு அமைச்சு பதவி - சரித்த ஹேரத் குற்றச்சாட்டு



13ஆவது அரசமைப்புத் திருத்தச்சட்டம் தொடர்பான யோசனை ஊடாக மாகாண சபைகளுக்கு அதிகாரங்களுடன் கூடிய அமைச்சு பதவிகளை அறிமுகப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்து வருகிறார். மொட்டுக் கட்சியைச் சேர்ந்த 45 பேருக்கு அமைச்சுப் பதவிகளை பெற்றுக்கொடுக்கவே அவர் இந்த திட்டத்தை முன்னெடுத்துள்ளார் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் சரித்த ஹேரத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "மொட்டுக் கட்சியை சேர்ந்த 45 பேருக்கு அமைச்சு பதவிகளை வழங்கவே ஜனாதிபதி, 13 ஆவது திருத்தச்சட்டம் மற்றும் அது தொடர்பான யோசனைகள் குறித்த வாத விவாதங்களை உருவாக்கியுள்ளார். இதன் மூலம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வடக்கு மக்களையும் பொதுஜன பெரமுனவையும் ஏமாற்றியுள்ளார்.

அத்துடன், ஜனாதிபதி தனது இந்த செயல்பாடுகள் மூலம் எண்ணக்கரு ரீதியிலான ஏமாற்றுத் திட்டத்தை முன்வைத்துள்ளார். இதற்கு முன்னர் எண்ணிக்கை

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# கனடா நகரங்களில் பாரிய காட்டுத்தீ



கனடாவில் காட்டுத்தீப் பரவால் கெலோவ்னா மற்றும் ஜெலோனைவ் பிரதேசங்கள் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இந்தக் காட்டுத்தீ மிகத் தீவிரமாகவும் எதிர்வு கூற முடியாமலும் உள்ளதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளார்கள்.


பிரிட்டிஷ் கொலம்பியாவின் கெலோனாவை அச்சுறுத்தும் வகையில் மேற்குப் பகுதியில் ஏற்பட்ட தனித் தீ, 24 மணி நேரத்தில் நூறு மடங்கு அதிகரித்துள்ளது. இப்பகுதியில் 2,500 க்கும் மேற்பட்ட சொத்துக்கள் காலி செய்யப்பட்டுள்ளன.

மேலும் ஆயிரக்கணக்கானோர் குறுகிய அறிவிப்பில் வெளியேற உள்ளனர்.

மேலும், கனடாவின் வடமேற்குப் பிராந்தியநதியத்தில் உள்ள ஜெலோனைவ் பிரதேசத்தில் 22000 மேற்பட்ட மக்கள் கனடாவின் வரலாற்றின் மிக மோசமான பாரிய காட்டுத்தீப் பரவலால் இடம்பெயர்ந்துள்ளார்கள்.

கனடா முழுவதும் கிட்டத்தட்ட 1,100 தீப்பரவல்கள் ஏற்பட்டுள்ளன. காலநிலை மாற்றம், வெப்பமான, வறண்ட வானிலை காட்டுத்தீக்கு எரிபொருளாக இருக்கிறது.

# அமெரிக்கா, தென் கொரியா, ஜப்பான் தலைவர்களின் உச்சிமாநாடு




அமெரிக்கா, ஜப்பான் மற்றும் தென் கொரியாவின் தலைவர்கள், வாஷிங்டன், டிசி அருகே வரலாற்று சிறப்புமிக்க கேம்ப் டேவிட்டில் நடைபெற்றது. வெள்ளியன்று நடந்த கேம்ப் டேவிட் நிகழ்வானது, அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், தென் கொரிய ஜனாதிபதி யூன் சுக்-யோல் மற்றும் ஜப்பானிய பிரதமர் ஃபுமியோ கிஷிடா ஆகியோருக்கு இடையேயான முதல் அதிகாரப்பூர்வ சந்திப்பைக் குறித்தது.

இது தென் கொரியாவிற்கும் ஜப்பானுக்கும் இடையிலான உறவுகளை மேம்படுத்தும் நோக்கில் கூட்டப்பட்டது. மேலும் ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில் சீனாவின் வளர்ந்துவரும் உறுதிப்பாடு மற்றும் சமீபத்திய வட கொரிய ஏவுகணை சோதனைகள் குறித்து மூன்று நாடுகளும் பிராந்திய பாதுகாப்பை நிலைநிறுத்துவதற்கும், இந்தோ-பசிபிக் ஈடுபாட்டை வலுப்படுத்தும் நோக்காகவும் கொண்டது. வருடாந்த இராணுவப் பயிற்சிகள்,

தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# வறட்சியால் வடக்கில் மட்டும் 75 ஆயிரம் மக்கள் பாதிப்பு



வறட்சி காலநிலையால் வடக்கு மாகாணத்தில் 75 ஆயிரத்து 287 பேரும் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 70 ஆயிரத்து 238 பேரும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நாடு முழுவதும் வறட்சியால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு இலட்சத்து 90 ஆயிரத்தை எட்டியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

விசேடமாக, 15 மாவட்டங்களில் உள்ள 52 பிரதேச செயலாளர் பிரிவுகளில் வசிக்கும் மக்கள் வறட்சியான காலநிலையினால் ஏற்பட்ட குடிதண்ணீர் பிரச்னையை எதிர்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர் தலையங்கம்

# சர்வதேச மற்றும் தேசிய மட்ட விளையாட்டுப் போட்டிகளில் சாதனை படைத்த மட்டக்களப்பு மாணவர்கள்

## கௌரவிக்கும் நிகழ்வு நடைபெற்றது



சர்வதேச மற்றும் தேசிய மட்ட கராத்தே, தைக்கொண்டோ போட்டிகளில் சாதனை படைத்து மட்டக்களப்பு மாவட்டத்திற்கு பெருமை சேர்த்த மாண வர்களை கௌரவிக்கும் நிகழ்வு இன்று நடைபெற்றது.



ஜே.கே.எம்.ஓ. கழகம் மற்றும் மட்டக்களப்பு விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் மாணவர்கள் அண்மையில் நடைபெற்ற 47வது தேசிய விளையாட்டு விழா மற்றும் தெற்காசிய விளையாட்டு விழா ஆகிய வற்றில் சாதனை படைத்துள்ளனர்.



ஜே.கே.எம்.ஓ. கழகம் மற்றும் மட்டக்களப்பு விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் மாணவன் அண்மையில் நடைபெற்ற தெற்காசிய விளை யாட்டுப்போட்டியில் ஆர்.துஸ்யந்தன் வெள்ளிப் பதக்கம் பெற்றதுடன் 47வது தேசிய மட்ட விளை யாட்டுப்போட்டியில் வெண்கல பதக்கத்தினையும் சுவீகரித்திருந்தார். அத்துடன் குறித்த கழகங்களின் வீராங்கனையான நிலுக்ஸிகா குறித்த போட்டியில் தைக்கொண்டோ பிரிவில் இரண்டாம் இடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.






தொடர்ச்சி 11ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழர் இறைமை ஒடுக்கம் தென்னிந்தியக் கரையில் இந்திய இறைமை ஒடுக்கத்தை ஏற்படுத்தும்

இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் கடந்த 10ம் திகதி நங்கூரமிட்ட 138 அதிகாரிகளைக் கொண்ட 129 மீற்றர் நீளமான 'ஹாய் யாங் 24 ஹாஓ' என்ற சீன ஆய்வுக்கப்பல் வெற்றிகரமாகத் தனது களப்பணிகளை நிறைவு செய்து கொண்டு 12ம் திகதி புறப்பட்டுச் செல்லும் பொழுதே, சீனாவின் மற்றொரு பெரிய ஆய்வுக்கப்பலான 3999 தொன் எடைகொண்ட 'ஷி யான் 6' இலங்கைக்குக் கள ஆய்வுப்பணிக்கு அக்டோபர் 6ம் திகதி வந்து நங்கூரமிடுமென்கிற செய்தி இந்திய ஊடகங்களில் வெளியாகியுள்ளது.

சீனாவின் 'யுவான் வாங் ' ஆய்வுக்கப்பல் 2022ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 16ம் திகதி அம்பாந்தோட்டைக்கு வந்து நங்கூரமிட்டது முதல் தொடங்கப்பட்டுள்ள இந்த ஆய்வுக்கப்பல்களின் இலங்கை வருகை, தென்னிந்தியாவில் கட்டமைக்கப்பட்டுள்ள இந்திய இராணுவ அதிமுக்கிய மையங்களை சீனா புலனாய்வுக்கு உட்படுத்துவதற்கான தொடர் செயற்திட்டமாக அமைகிறது என்ற சந்தேகமும் அச்சமும் இந்திய பாதுகாப்பு வட்டாரங்களில் வலுவாக எழுந்துள்ளது.

இதனை உறுதி செய்வது போல 2025 முதல் 2028க்கு இடையில் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தைச் சீனா தனது கடற்படைத் தளமாக மாற்றும் திட்டமொன்றைக் கொண்டுள்ளதென அமெரிக்காவின் வேர்ஜினியா மாநில ஆய்வு நிறுவனமான எய்ட்டேட்டா விடுத்துள்ள தகவல் அமைகிறது.

மேலும் சீன ஆய்வுக்கப்பல்களுக்கு அனுமதியளிக்க வேண்டாமென 2022 முதல் இந்தியா சிறிலங்காவிடம் ராஜதந்திர முறையில் முயற்சித்தும் இதுவரை சீனாவுடனான சிறிலங்காவின் உறவு மேலும் மேலும் வளர்கின்றதே தவிர இந்தியாவுக்குச் சார்பான ஒரு சிறு மாற்றத்தைக் கூட இந்தியாவால் பெறமுடியவில்லை.

இவற்றை எல்லாம், பொருத்திப் பார்க்கின்ற பொழுது இந்தியா ஈழத்தமிழர்களின் இந்துமாக்கடல் மேலான கடற்புலிகளின் பாதுகாப்பினை சிறிலங்கா இனஅழிப்பு போரால் ஒடுக்குவதற்கு அதற்குப் பக்கத் துணையாக நின்றதன் விளைவாக தென்னிந்திய இந்துமாக்கடல் மேலான தனது இறைமையை இழக்கத் தொடங்கியுள்ளதை உலகுக்குத் தெளிவுபடுத்துகிறது.

அத்துடன் சிறிலங்கா நடைமுறை அரசியலில் இந்தியாவை அலட்சியம் செய்கின்ற ஒவ்வொரு முறையும் சிறிலங்கா சீன உறவு மேலும் மேலும் உறுதியாவதும் வரலாறாக உள்ளது. அதற்கமைய சீனாவின் தெற்குப்பகுதியில் நடைபெற்ற சீன- தெற்காசிய எக்ஸ்போ வில் கலந்து கொள்ளச் சென்ற சிறிலங்காவின் பிரதமர் தினேஸ் குணவர்த்தனாவுக்கு சீனாவின் வெளிவிவகார அமைச்சர் வாங் ஜி (Wang Yi), சிறிலங்கா வறுமையின் பொறியில் இருந்தும் வளர்ச்சிகளின்மை என்னும் பொறியில் இருந்தும் வெளிவருவதற்கும் சிறிலங்காவின் தொழிற்துறை வளர்ச்சித் திட்டங்களுக்கும் விவசாய உற்பத்திகளின் நவீனமயப்படுத்தலுக்கும், இவற்றில் சிறிலங்கா சுதந்திரமான முறையில் வளர்ச்சிகள் பெறுவதற்குச் சீனா உதவும் என உறுதிமொழியளித்துள்ளார். அத்துடன் சீன தெற்காசிய எக்ஸ்போவில் சிறிலங்கா முக்கிய பங்காளராக உள்ளது எனவும் தெரிவித்துள்ளார். இந்த உதவிகள் எல்லாம் சிறிலங்கா தனது இறைமையுள்ள சுதந்திரத்தையும், தேசிய அடையாளப்படுத்தலையும் உறுதிப்படுத்தும் வகையில் ஆளுவதில் சீனாவுக்கு உள்ள அனுபவத்தை பகிர்ந்து பலதரப்பட்ட களங்களில் ஒத்துழைப்புக்களை வழங்கும் எனவும் அவர் உறுதி அளித்துள்ளார். இதில் ஈழத்தமிழர்களின் மேலான சிறிலங்காவின் இனஅழிப்பு இனத்துடைப்பு பண்பாட்டு இனஅழிப்பு எல்லாமே சிறிலங்கா தனது இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பேணுவதற்கான தேசிய பாதுகாப்பைப் பேணுவதற்கான சட்டரீதியான செயற்பாடாகச் சீனா மட்டுல்ல இந்தியா மட்டுமல்ல உலகநாடுகளாலும் நியாயப்படுத்தப்படுவதுதான் வேதனையான விடயம் மட்டுமல்ல ஈழத்தமிழர்கள் மேலான சிறிலங்கா அரசாங்க இனஅழிப்பு செயற்திட்டங்களுக்கான பலமும் வளமுமாகவும் திகழ்கின்றது.

இந்நிலையில் ஈழத்தமிழர்கள் இந்தியாவை தங்களது வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களது இறைமையுள்ள சுதந்திர வாழ்வை வாழ்வதற்குரிய வகையில் ஈழத்தமிழர் தேசியப் பிரச்சினைக்கான தீர்வுகளை சிறிலங்காவின் இறைமைக்குள் ஈழத்தமிழர் இறைமையை அடக்கி ஒடுக்காது ஈழத்தமிழர்க்கு பாதுகாப்பான அமைதியை ஏற்படுத்தத் தக்கவகையில் முன்மொழியுமாறு கோர வேண்டியவர்களாக உள்ளனர்.

இறைமை என்பது மக்களுக்கு மண்ணுக்கு மேலுள்ள பிரிக்கப்பட இயலாத பிறப்புரிமை. மக்களுடன் நல்லுறவுகளை உறுதிப்படுத்துவதன் மூலமே ஒரு தேச மக்கள் இன்னொரு தேசமக்களுடன் தங்கள் இறைமையைப் பகிர்ந்து கூட்டொருங்கு இறைமையுடன் இருதேச மக்களுக்கான இறைமையுடன் கூடிய தன்னாட்சி உரிமைகளையும் அனைத்துலகத் தொடர்புகளையும் வளர்த்துக் கொள்ள முடியும். எனவே இந்தியா ஈழத்தமிழ் மக்களுடன் நல்லுறவை அவர்களது இறைமையுடன் கூடிய சுதந்திர வாழ்வுக்கு உதவுதன் வழியாகவே தென்னந்தியாவுடன் கடல் வழிப் பகிர்வு எல்லையை மட்டுமல்ல பிரிக்கப்பட இயலாத தமிழின மக்கள் என்ற இனத்துவ ஒருமைப்பாட்டையும் மொழித்துவப் பண்பாட்டு வாழ்வியலையம் கொண்டிருக்கும் இந்துமாக்கடல் பகுதிகளில் இந்தியா தனது இறைமையை நட்புறவாடலால் ஈழ - இந்திய கூட்டொருங்கு இறைமையாக வலுப்படுத்த முடியும். இதுவே இரு தேச மக்களதும் இறைமை இழப்பைத் தடுக்க ஒரேவழி. இதனை விடுத்து, ஈழத்தமிழர்களிடை சிந்தனைக் குழப்பங்களையோ செயலாக்கத் திறன் குறைப்புக்களையே ஏற்படுத்தும் சிந்தனைகள் உரையாடல்கள் செயற்பாடுகளைத் தாயகத்திலும் புலத்திலும் இந்தியா தானும் தவிர்த்து மற்றயை அனைத்துலக நாடுகளையும் தவிர்க்கச் செய்து ஈழத்தமிழர்களின் இறைமையுடன் கூடிய சுதந்திர வாழ்வுக்கு வலுவூட்டும் பொழுதே இயல்பாகவே இந்திய ஈழமக்கள் இறைமை கூட்டொருங்குச் செயற்பாடுகள் இந்துமாக்கடல் அமைதியையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்தும் என்பது இலக்கின் எண்ணம். இந்த உறுதிப்படுத்தல் ஈழத்தமிழ் மக்களின் இறைமையும் இந்திய இறைமையும் இணைக்கும் ஆற்றலாக மாறி இந்து மாக்கடலின் தென்னிந்தியக் கரைக்கான கூட்டொருங்குப் பாதுகாப்பாக நிலைபெறும்.

ஆசிரியர்



# தொடர்ந்து வரும் சீனக் கப்பல்கள்; டில்லி என்ன செய்யப்போகின்றது?

**அகிலன்**

இந்தியாவுக்கு அச்சுறுத்தலைக் கொடுப்பதற்கும், இந்தியாவின் கேந்திர மையங்களைப் புலனாய்வு செய்வதற்கும் இலங்கையைப் பயன்படுத்துவதில் சீனா வெற்றி பெற்றிருப்பதாகவே தெரிகின்றது. கடல்வள ஆய்வு என்பது உள்பட பல்வேறு வடிவங்களில் அவ்வப்போது இலங்கைத் துறைமுகங்களுக்கு வரும் சீனக் கப்பல்களின் பின்னணியில் உள்ள மர்மம் இன்று வரையில் வெளிப்படாத ஒன்றாகவே இருக்கின்றது.

இந்தக் கப்பல்களின் வருகை மூன்று விதங்களில் இந்தியாவுக்குத் தலையிடியைக் கொடுக்கின்றது. முதலாவது, இந்தியா தனது கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகக் கருதும் கடற்பகுதிக்குள் சீனக் கப்பல்கள் நுளைவது இந்தியாவின் மேலாதிக்கத்துக்கான சவாலக இருக்கின்றது. இரண்டாவது, சீனக்கப்பல்கள் பெரும்பாலும் போர்க் கப்பல்களாக அல்லது புலனாய்வுக் கப்பல்களாக இருக்கின்றது. மூன்றாவது, இந்தக் கப்பல் வருகையின் மூலமாக சீனாவுடன் இலங்கை நெருங்கிச் செல்வது.

சீனக் கப்பல்கள் இலங்கைக் கடற்பரப்புக்குள் வருவதைத் தடுத்து நிறுத்துவதற்கு இந்தியா பகிரதப் பிரயத்தனங்களை மேற்கொள்வது இதனால்தான். ஆனால், இந்தியாவின் கரிசனைகளையும் மீறி சீனக்கப்பல்கள் வரிசையாக வந்துகொண்டுதான் இருக்கின்றன. அதேபோல, இலங்கையும் அவற்றுக்கான அனுமதியைத் தொடர்ந்தும் வழங்கிக்கொண்டுதான் இருக்கின் றது.

## அடுத்த கப்பல் வருகிறது

சீனாவின் மற்றொரு ஆய்வுக் கப்பல் ஒக்ரோபர் மாதத்தில் இலங்கை வருவது உறுதி செய்யப்பட்டிருக்கின்றது. இலங்கை கடற்பரப்பில் 17 நாள்களுக்குத் தங்கியிருந்து ஆய்வுகளை இந்தக் கப்பல் மேற்கொள்ளும். நாரா நிறுவனத்துடன் இணைந்து மேற்கொள்ளப்படவுள்ள இந்த கடல்வள ஆய்வு ஏதோ ஒரு வகையில் தமக்கு ஆபத்தானதாக அமையலாம் என்ற அச்சம் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது. அந்தக் கப்பலின் வருகையைத் தடுத்து நிறுத்துவதற்கான இராஜதந்திர நகர்வுகளை இந்தியா ஏற்பனவே ஆரம்பித்து விட்டதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால், இதுவும் கடந்த கால முயற்சிகளைப் போல தோல்வியில் முடியலாம்.

இலங்கை கடற்பகுதிக்குள் சீனாவின் அதிநவீன கப்பல்கள் நுழைவது அதிகரித்துச் செல்வது தொடர்பில் இந்தியாவும் தனது கரிசணையை தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றது. இலங்கையும் அந்த கரிசனையை அக்கறையுடன் செவிமடுப்பதாகவே காட்டிக் கொள்கின்றது. ஆனால், சீனாவின் எந்தவொரு கப்பலையும் தடுத்துநிறுத்துவதில் இலங்கை அரசங்கம் உண்மையில் அக்கறை காட்டவில்லை. புதுடில்லியின் சீற்றத்தை இது அதிகரித்தாலும் பொறுமையகவே இருப்பதைவிட டில்லிக்கு வேறு தெரிவுகள் எதுவும் இல்லை.

## கொழும்பு வந்த போர்க்கப்பல்

ஜூலை ஆரம்பத்தில் இலங்கை கடலிற்குள் புகுந்த சீனாவின் அதிநவீன கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய போர்க் கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்தில் தரிந்தது ஏன் என்பதையிட்டு இந்தியா இப்போதும் ஆராய்ந்து கொண்டிருக்கின்றது. சீனக் கப்பல்கள் என்னதான் ஆய்வு என்று சொல்லிக்கொண்டு இலங்கைக் கடற்பகுதிக்குள் வந்து சென்றாலும், அவை தமக்கு எதிரான புலனாய்வுத் தகவல்களைத் திரட்டுவதற்காகவே வருகின்றன என்ற அச்சம்தான் டில்லியிடம் உள்ளது. இந்திய – சீன உறவு நிலையைப் பார்க்கின்ற போது அந்த அச்சம் நியாயமானதாகவே இருக்கின்றது.

சீனாவின் யுவான் வாங்-5, செயற்கைக்கோள் தொழில் நுட்பத்துடன் கண்காணிக்கும் திறன் கொண்ட போர்க் கப்பல் கடந்த வருடம் (2022) இதே காலப் பகுதியில் - அதாவது ஓகஸ்ட் மாதம் இலங்கையை வந்தடைந்தது. இவ்வாறு யுவான் வாங் 5 இலங்கை வந்தடைந்தாலும், அந்தக் கப்பல் வருவதான செய்தி அதற்கு முன்னர் பல மாதங்களுக்கு முன்னதாகவே வெளியாகியிருந்தது. இதனால் பல திசைகளிலும் இந்தியாவினால் அது கண்காணிக்கப்பட்டதோடு, இலங்கையின் மாத்தறையை அண்டிய கடற் பகுதியில் இருந்து இந்தியாவின் அதி நவீன வசதி கொண்ட கப்பல் கண்காணிப்பதில் ஈடுபட்டதாகவும் அப்போது செய்தி வந்தது.

இப்போது ஒரு வருடத்தின் பின்னர் சீனாவின் இரண்டாவது கப்பல் இலங்கைக்கு வந்து சென்றது இந்தியாவுக்கு சீற்றத்தை ஏற்படுத்தியது. தற்போது வந்து சென்ற கப்பல் போர்க் கப்பலாக இருப்பினும் அதன் வல்லமை இந்தியாவுக்குத் தெரியும். அதனால் தமக்கான பாதுகாப்புக்கு அது பெருமளவு அச்சுறுத்தலல்ல என்று இந்தியா நம்புகின்றது. அதாவது அந்தக் கப்பல் புலனாய்வுக் கப்பல் அல்ல என்பது இந்தியாவுக்கு சற்று ஆறுதல் என்று சொல்லலாம்.

## கண்காணிப்புக் கப்பல்

இருப்பினும் கடந்த ஆண்டு வந்த கப்பல் இப்போது வந்து சென்ற இந்தப் போர்க் கப்பலை விட ஆபத்தானது என்பதால்தான் அதனையிட்டு இந்திய அதிகளவுக்கு அவதானமாக இருந்தது. கடந்த வருடம் வந்த சீனாவின் சந்தேகத்திற்குரிய விண்வெளி ஆய்வுக் கப்பலில், இந்தியாவின் முக்கியமான இராணுவ நிலைகளை உளவு பார்க்க வாய்ப்பு இருந்ததால், அந்தக் கப்பல் வருவதற்கு இந்தியா கடும் எதிர்ப்பு தெரிவித்தது. எனினும் அப்போது எதிர்ப்பையும் மீறி இலங்கை அனுமதி வழங்கியதன்பின்னர்கடந்தவருடம்ஓகஸ்ட்மாதம் மீண்டும் அதி நவீன கண்காணிப்பு வசதிகளுடன் கூடிய சீன போர்க் கப்பலான “ஹாய் யாங் 24 ஹாவ்’ இலங்கையின் கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்து திரும்பிச் சென்றுள்ளது.

இந்தியாவின் அணுஉலைகளும், பல படைத் தளங்களும் தென்னிந்தியாவிலேயே உளளன. சீன ஆய்வுக் கப்பல் இலங்கையிலிருந்து கொண்டே அது தொடர்பான தகவல்களைச் சேகரிக்கக்கூடியது. இந்தியா பதற்றமடைந்திருந்தமைக்கு அதுதான் பிரதான காரணம். ஆனால், இந்தியாவின் இந்தப் பதற்றத்தையிட்டு கொழும்பு கவலைப்படவில்லை என்பதுதான் புதுடில்லியின் ஆதங்கம்.

கடந்த சில வருடங்களாக நாட்டிற்கு வருகை தந்துள்ள இவ்வாறான கப்பல்கள் தொடர்பில் ஆராய்ந்த போது, அவற்றில் பெரும்பாலானவை சீனாவை சேர்ந்த ஆய்வுக் கப்பல்களாகவே உள்ளன. இது கூட இந்தியாவின் சந்தேகத்தை அதிகரிக்கின்றது.

## இலங்கை அரசு அனுமதி

கடந்த மாதம் வருகை தந்த போர்க் கப்பலின் வருகை குறித்து இந்திய அதிகாரிகளிடம் சீனா தெரிவித்த போதும், அதன் வருகை குறித்து இந்திய தரப்பில் கவலை தெரிவிக்கப்பட்டது. எனினும் அந்தக் கப்பலுக்கும் இலங்கை அனுமதி வழங்கியது. அந்தக் கப்பல் கொழும்புத் துறைமுகத்தில் இருந்து ஓகஸ்ட் 12ஆம் திகதி புறப்பட்டுச் சென்றது. இந்தப் போர்க் கப்பல் வருவதற்கும் சீன அதிகாரிகள் இலங்கையிடம் முன்கூட்டியே அனுமதி கோரியிருந்த சமயம் இந்தியத் தரப்பினால் வெளிப்படுத்தப்பட்ட கவலைகள் காரணமாக சீனாவின் போர்க் கப்பலுக்கு அனுமதி வழங்குவதில் இலங்கை தாமதம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சூழ்நிலையிலேயே 3வது மிகப்பெரிய கப்பலும் சீனாவில் இருந்து வருகை தரவுள்ளதான தகவல் இப்போது இலங்கைத் தரப்பில் இருந்து இந்தியாவிற்கு வழங்கப்பட்டுள்ளது. “சியான் 6” எனப்படும் 3,999 தொன் எடை கொண்டிந்த ஆராச்சிக் கப்பல் ஒக்டோபர் மாதம் இலங்கையின் கொழும்பு மற்றும் அம்பாந்தோட்டை துறைமுகங்களில் தரித்து நின்று ஆராச்சியில் ஈடுபடவுள்ளதாகவே இந்தியத் தரப்பிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# நெடுங்கேணி சீனித் தொழிற்சாலை தமிழ் மக்களுக்கு மிக ஆபத்தானது



**சர்ச்சைக்குரிய குருந்தூர் மலைப்பகுதி மீண்டும் பரபரப்பாகியிருக்கின்றது. இங்குள்ள ஆதிசிவன் ஐயனாருக்கு பொங்கல் விழா வெள்ளிக்கிழமை நடாத்தப்பட்டுள்ளது.இனவாதம் பேசும் உதய கம்பன்பிலவும் தமது பரிவாரங்களுடன் இங்கு வருகை தரப்போவதாக அறிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியது. ஆனால், தடைகளை தாண்டி பொங்கல் சிறப்பாக நடைபெற்றது. இது தொடர்பாகவும் நெடுங்கேணி சீனித் தொழிற்சாலைத் திட்டம் மற்றும் கடுமையான வரட்சியால் வன்னியில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்தும் வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினருமான துரைராஜா ரவிகரன் அனைத்துலக உயிரோடைத் தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு தெரிவித்த கருத்துக்களின் முக்கிய பகுதிகளை இலக்கின் வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம்**

## துரைராஜா ரவிகரன் செவ்வி

**தொல்லியல் திணைக்கள அதிகாரிகளுடனும் குருந்தூர் தொடர்பாக நீங்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்தி இருக்கின்றீர்கள். அவர்களுடைய நிலைப்பாடு எவ்வாறாக இருக்கின்றது?**

தொல்லியல் திணைக்களத்தின் எட்டு சட்டத்தரணிகள் அன்று நீதி மன்றத்தில் நான் சொன்னதுபோல் எட்டாம் திகதி கலந்து கொண்டிருந்தார்கள். அவர்களுடைய கருத்து எங்களுடைய பொங்கல் நிகழ்வுகளுக்கு மாறாக இருக்கவில்லை ஆனால் அவர்கள் நிலத்தின் அடியில் தீ எரியூட்ட வேண்டாம் என்றும் நிலத்தின் மேல் கற்கள் பரவி அதன் மேல் தகரம் வைத்து அதன் மேல் கற்கள் பரவி பொங்கல் நிகழ்வுகளை முன்னெடுக்கும்படி முன்பு கூறியிருந்தார்கள் அதில் இருந்து அவர்கள் மாறவில்லை.

ஆனால் நாங்களும் அந்த இடத்தில் பொங்கல் செய்து ஆதி சிவனாரை நாங்கள் வழிபட வேண்டும் என்ற எண்ணத்துடன் அவர்கள் கூறியதுபோல் கற்கள் பரவி தகரம் வைத்து அதன் மேல் கற்கள் பரவி பொங்கல் வழிபாடுகளை செய்வதற்கு நாங்களும் மறுப்பு கூறவில்லை. அந்த நடவடிக்கைகளுக்கு தொல்லியல் திணைக்களம் மறுப்பு சொல்லவில்லை. அவர்கள் அன்று நீதி மன்றத்தில் ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

**இப்போது நொடுங்கேணியில் அமைக்கப்பட போடும் சீனித்தொழிச்சாலை மற்றும் கரும்பு சர்சைக்குரிய விடையமாக மாறி உள்ளது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட அண்மையில் இது தொடர்பான கருத்துக்களை மன்னார் விஜயத்தின் போது முன்வைத்திருந்தார். இந்த தொழிற்சாலை அமைக்கப்படுவதில் உங்களுடைய கருத்து என்ன?**

நான் ஏற்கனவே இது தொடர்பான எனது நிலைப்பாட்டை தெரிவித்துள்ளேன். இந்த தொழிச்சாலை அமைக்கப்படுவது முற்று முழுதான ஒரு பிழையான நடவடிக்கை. வவுனியா வடக்கு என்று சொல்லப்படுகின்ற இடம் முல்லைத்தீவோடு அண்மித்த பகுதி. முல்லைத்தீவு மட்டுமல்ல வவுனியா மட்டுமல்ல எங்களுடைய வடக்கு மாகாணமே இதனால் பாதிக்கப் படும்.

நிச்சயமாகஇந்த தொழிச்சாலையை காரணம் காட்டி சிங்கள குடியேற்றம் ஒன்று மிகப் பெரிய அளவில் இடம் பெறும். எம்மவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும் என்றகருத்தை நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் இந்த இடத்தை சேர்ந்தவர்கள் இந்த வடக்கிலே வாழ்கின்றவர்கள். முல்லைத்தீவு சொந்த இடம். எங்களுடைய பிறப்பு எங்களுடைய பரம்பரை என்று சொல்லி எங்களுக்கு முல்லைத்தீவை பற்றி பூரணமாக தெரியும். அதே நேரம் வவுனியா மன்னார் வடக்கு மாகாணம் கிழக்கு மாகாணம் என்றும் நாங்கள் எல்லாம் தெரியாமல் இல்லை.

முற்று முழுதான பிழையான நடவடிக்கையை சம்மந்தப்பட்டவர்கள் செய்து கொண்டு வருகிறார்கள். இந்த சீனித்தொழிற்சாலை அமைக்கப்பட்டால் நிச்சயமாக பெரியதொரு சிங்கள குடியேற்றம் வந்து எங்களுடைய வடக்கு மாகாண நிலமை மாறக்கூடிய வகையில் இருக்கும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. இதற்கு நான் ஏற்கனவே சொல்லி இருந்தேன் இதுக்கு அந்த அமைப்பில் உள்ளவர்களே ஊடானவர்களே சொல்லி இருக்கின்றார்கள் இது பிழை என்று.

இன்றைக்கு அதில் உள்ள விந்தன் கனகரட்ணம் அவர்களின் அறிக்கையும் வந்திருக்கின்றது அவர் வெளிப்படையாக சொல்லி இருக்கின்றார் இதில் உள்ள நடவடிக்கைகள் பிழையானது என்று.

முற்று முழுதாக இத்திட்டத்தை வர விட மாட்டோம். ஏலக்கூடியளவில் நாங்கள் முல்லத்தீவோ, வவுனியாவோ மன்னாரோ, யாழ்ப்பாணமோ, கிளிநொச்சியோ நாங்கள் மக்கள் சேர்ந்து தடுக்கக்கூடிய வகையில் பல முயற்சிகளை எடுப்போம். அதை மீறி இவர்கள் கொண்டு வருவார்களாக இருந்தால் வடக்கு மாகாணத்தின் மக்களின் நடவடிக்கைகளுக்கு பாதகமான அதாவது சிங்கள குடியேற்றத்தை நாங்கள் எவ்வளவு தடுத்து கொண்டிருக்கின்றோமோ அந்த தடுப்புக்கு ஒரு மாறான விதத்தில் ஒரு சிங்கள குடியேற்றத்தை பாரியளவில் இங்கு கொண்டு வந்து குடியேற்றக்கூடிய திட்டத்தை சம்மந்தப் பட்டவர்கள் செய்து கொண்டு இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை

**சிங்கள குடியேற்றம் என்பதை விட நிலத்தடி நீர் பாதிக்கப்படும் சுற்றாடலுக்கு பாதிப்பு ஏற்படும் என்ற வகையிலான கருத்துக்களும் முன்வைக்கப்படுகின்றன. இது தொடர்பாக உங்களுடைய கருத்துக்கள் என்ன?**

நான் சொல்லும் போது சிங்கள குடியேற்றம் என்று மட்டும் கூறிவிட்டேன். ஆனால் நிலத்தடி நீர் பாதிப்பென்பது ஏற்கனவே அது சம்மந்தபட்ட அறிஞர்களாலும் மற்றும் புத்திஜீவிகளாலும் சொல்லப்பட்ட கருத்து. வடக்கு மாகாணத்திற்கு இது பொருத்தம் இல்லாத திட்டம். நாங்கள் மாகாண சபையில் இருந்தபோதே 2016 ஆம் ஆண்டு என்று நினைக்கிறேன் இந்த திட்டம் அங்கு கொண்டு வரப்பட்டபோது நாங்கள் மாகாணசபையால் எதிர்த்து அதை தடுக்கிறதுக்குரிய வழியை நாங்கள் மேற்கொண்டோம். மாகாண சபையில் இருந்த அகிகமானவர்களுக்கு தெரியும் இப்படியான திட்டத்தை மாகாணசபையும் இல்லாத நேரம் கொண்டு வருகிறார்கள் என்பது ஒரு பிழையான நடவடிக்கை

நீரே இல்லை இந்த மாகாவலி திட்டம் மாதிரி நீர் இல்லை ஆனால் காணிகளைபிடிக்கினம். இப்படியான ஒரு கரும்பு தோட்டத்திற்கு எவ்வளவு நீர் தேவை என்பது எல்லாருக்கும் தெரிந்த விடையம். மிக அதிகமாக நீர் கரும்பு தோட்டம் செய்கைக்கு சீனி உற்பத்திக்கு தேவை. இப்படியான ஒரு பிழையான நடவடிக்கையை கொண்டு வந்து இஞ்ச போட்டிருக்கினம். இந்த நிலமை உதாரணமாக உங்களுக்கு தெரியும் கந்தளாய் சீனித்தொழிச்சாலை எங்கெங்க இருக்குதோ

இருக்குதோ அந் இடம் எல்லாம் இந்த நீர் பிரச்சினை ஏற்பட்டு கொண்டிருக்கிறது. ஏற்கனவே எல்லாருக்கும் தெரியும் இதனுடைய முக்கிய

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# மலையக உறவுகளுக்கு கைகொடுப்பது எமது இருப்பினை உறுதிப்படுத்தும்

மட்டு.நகரான்

'வேர்களை மீட்டு உரிமை வென்றிட மாண்புமிகு மலையகம்' எனும் தொனிப் பொருளில் வடகிழக்கு எங்கும் மலையக மக்களுக்கு ஆதரவு கோரும் வகையிலான போராட்டங்கள் தமிழ் மக்களினால் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

தமிழர்கள் என்ற காரணத்தினால் இந்த நாட்டில் பெரும்பான்மையினத்தால் ஒதுக்கப்படும் நிலைமையே இருந்துவருகின்றது. இதற்கு பல உதாரணங்கள் உள்ளபோதிலும் மலையக மக்களின் வாழ்க்கையே இந்த நாட்டில் தமிழ் மக்கள் எந்தவித உரிமையும் அற்றுவாழ்வதற்கான மிகப்பெரும் சாட்சியாகவுள்ளனர்.

மலையக மக்களை ஒருபோதும் வடகிழக்கு மக்கள் ஒதுக்கிட்டு செயற்படமுடியாது. தமிழர்களின் பல்வேறு போராட்டங்களில் தமிழ் மக்களுக்கு உறுதுணையாக மலையக மக்கள் இருந்துள்ளார்கள். அந்த மக்களுக்கான அடிப்படை உரிமையினையாவது பெற்றுக்கொடுப்பதற்கு அவர்களுக்கு ஆதரவாக போராடவேண்டிய தேவை இன்று வடகிழக்கு தமிழர்களுக்கு இருக்கின்றது.

மலைய மக்கள் இந்த நாட்டிற்கு அடிமைகளாக கொண்டுவரப்பட்டு 200 ஆண்டுகள் கடந்துள்ளது. அவர்கள் அன்று எவ்வாறு கொண்டுவரப்பட்டார்களோ அதே அடிமை நிலையிலேயே அவர்கள் வாழும் நிலைமையினை காணமுடிகின்றது.

பிரித்தானியார் இந்த நாட்டினை ஆட்சி செய்த காலப்பகுதியில் மலையக பகுதிகளில் கோப்பி பயிரிடுவதற்கு அப்பகுதியை சேர்ந்த மக்கள் ஒத்துழைக்காத நிலையில் தென்னிந்தியாவிலிருந்து மக்கள் அடிமைகளாக கொண்டுவரப்பட்டு இந்த நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உரமாக்கப்பட்டனர்.

இலங்கையினைப்பொறுத்த வரையில் இலங்கையின் பொருளாதாரத்தின் முதுகெலும்பாக இருப்பது தேயிலை உற்பத்தியாகும். இந்த தேயிலை உற்பத்தியின் முதுகெலும்பான தோட்டத்தொழிலாளர்கள் உள்ளபோதிலும் அவர்கள் வெறும் குப்பைகளாகவே இந்த நாட்டின் அரசாங்கத்தினால் நோக்கப்பட்டுவருகின்றது.

மலையக சமூகம் சார்ந்து பேசவேண்டிய தேவை இன்று எழுந்துள்ளது. வடகிழக்கினைப் பொறுத்த வரையில் மலையக மக்களின் உதவிகள் அர்ப்பணிப்புகளை ஒருபோதும் மறந்து செயற்படமுடியாது. இன்றைய காலத்தில் வடகிழக்கின் எல்லைப்பகுதிகளின் பல பகுதிகள் இன்று மலையக மக்களினால் பாதுகாக்கப்படும் நிலைமையினை காணமுடிகின்றது.

1983ஆம் ஆண்டும் அதற்கு முன்னரும் கொழும்பு உட்பட மலையக பகுதிகளில் சிங்கள பேரினவாத சக்திகளினால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்முறைகளின்போது இடம்பெயர்ந்த மலையக உறவுகளே இன்று எமது எல்லைகளைப்பாதுகாத்துவரும் நிலைமையினை காணாலாம். இன்றும் எமது எல்லைகள் ஓரளவு பாதுகாக்கப்படுகின்றது என்றால் இந்த மலையக உறவுகளின் அர்ப்பணிப்பும் தியாகமும்தான் காரணமாக அமைகின்றது.

இன்று மலையகத்தில் அந்த மக்களின் பரம்பரைகளினால் உருவாக்கப்பட்ட தோட்டங்களில் அவர்களுக்கு சொந்தமாக ஒரு காணியில்லை. சொந்தமாக ஒரு பாடசாலையில்லை, சொந்தமாக ஒரு வர்த்தக நிலையம் நடாத்தமுடியாத நிலை இன்றும் 200வருடங்கள் தாண்டியும் அடிமைகளாகவே வாழும் நிலைமையினை காணமுடிகின்றது. தமது கடின உழைப்பால் இந்த நாட்டையே கட்டியெழுப்பும் இவர்களையே இந்த நாடு புறக்கணிக்கும்போது வடகிழக்கில் வாழும் தமிழர்கள் தொடர்பில் இவர்கள் எவ்வாறு சிந்திக்கப்போகின்றார்கள் என்பதை சொல்ல வேண்டியதில்லை.

நாங்கள் வடகிழக்கில் எமது உரிமைக்காக அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் போராடிவரும் நிலையில் இதுவரையில் தமிழ் மக்கள் இழந்தது பெருமளவு. ஆனால் உரிமை என்பதை இதுவரை அடையமுடியாத இலக்காகவே இருந்து வருகின்றது. இவ்வாறான நிலையில் எந்த உரிமை போராட்டத்தினையும் முன்னெடுக்கமுடியாத நிலையில் உள்ள மலையக உறவுகளுக்கு எவ்வாறு இந்த நாடு உரிமைகளை வழங்கப்போகின்றது என்பதை சிந்திக்கவேண்டிய நிலையில் உள்ளோம்.

இவ்வாறான நிலையிலேயே மலையக மக்களின் உரிமையினை வலியுறுத்தும் வகையில் வடகிழக்கில் பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இந்த போராட்டங்களை நாங்கள் வெறுமனே ஒரு போராட்டமாக கடந்து செல்லமுடியாத நிலையே உள்ளது. இதுவரை காலமும் வடகிழக்கு மக்கள் தங்களது உரிமைகளுக்காக தாங்களும் மலையக மக்கள் தமது உரிமைகளுக்காக தாங்களும் போராடியதே வரலாறாகயிருந்துவரும் நிலையில் பாரியளவிலான போராட்டம் ஒன்று மலையகத்தினை நோக்கி நடாத்தப்பட்டுள்ளதானது மலையக மக்களுக்கான ஒரு நல்ல சமிக்ஞையாகவே நோக்கப்படவேண்டும்.




அண்மையில் மட்டக்களப்பில் 'வேர்களை மீட்டு உரிமை வென்றிட மாண்புமிகு மலையகம்' எனும் தொனிப் பொருளில் மாபெரும் மலையக மக்களுக்கான ஆதரவு நடைபவனியொன்று கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆரம்பித்து மட்டக்களப்பு காந்திபூங்கா வரையில் வந்தது. இந்த போராட்டத்தில் பல்கலைக்கழக மாணவர்கள், மதத்தலைவர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் என பெருமளவானோர் கலந்துகொண்டனர்.

இந்த போராட்டத்தின் போது மலையக பல்கலைக்கழக மாணவர்கள் பெருமளவானோர் கலந்துகொண்டிருந்தனர். அவர்கள் தமது சமூகத்தின் கோரிக்கைகள் அவர்களின் நிலைமைகள் குறித்து இந்த பேரணியின்போது மிகவும் உணர்ச்சிபூர்வமான கருத்துகளை முன்வைத்தனர். இதனை வெறும் கருத்துகளாக எங்களால் கடந்து செல்லமுடியவில்லை.

'அதிகமான ஆக்கள் ஏறிய புகையிரம் இன்னும் புறப்படாத நிலையிலேயே உள்ளது" என மலையக மக்களின் வாழ்க்கையின் சோகத்தினை இதன்போது வெளிப்படுத்தினார்கள் பல்கலைகழக மாணவர்கள். டைட்டானிக் கப்பல் தொடர்பில் பேசும் மக்கள் தோட்டத்தொழிலாளர்களுடன் மூழ்கிய ஆதிலட்சுமி கப்பல் தொடர்பில் பேசாத நிலையே இருந்துவருவதாகவும் இதன்போது மலையக மாணவி ஒருவர் கவலை தெரிவித்தார்.

மலையக மக்களின் வாழ்க்கையின் நிலைமைகள் குறித்து இதன்போது மலையக மாணவர்களின் வெளிப்படுத்தல்கள் என்பது நீறுபூத்த நெருப்பாக இருப்பதை காணமுடிகின்றது. இது வெளிப்படுமானால் எதிர்காலத்தில் மலையகத்திலும் பாரியளவிலான போராட்டங்கள் நடைபெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக காணப்படுகின்றது.

கடந்த காலத்தில் வடகிழக்கில் முன்னெடுக்கப்பட்ட பல போராட்டங்களின் மையப்புள்ளிகள் யாழ்பல்கலைக் கழகத்திலேயே இருந்தது என்பதை யாரும் மறந்துவிடமுடியாது. இன்று வடகிழக்கு உட்பட பல்வேறு பல்கலைக் கழகங்களிலும் கல்வி பயிலும் மலையக மாணவர்கள் மத்தியில் எழுந்துள்ள இந்த நெருப்பு எதிர்காலத்தில் பரவுமானால் முழு இலங்கையும் கடும் பாதிப்புகளை எதிர்கொள்ளும் நிலைமை ஏற்படும்.

இந்த நிலைமையிலேயே வடகிழக்கு மக்கள் என்னவகையான உதவிகளை மலையக மக்களின் வளர்ச்சிக்கு முன்னெடுக்கமுடியும் என்பது குறித்து சிந்திக்கவேண்டும். இன்றைய நிலையில் வடகிழக்கில் பாரியளவிலான காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. அதிலும் கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியான காணி அபகரிப்புகள் முன்னெடுக்கப்படுகின்றன. கிழக்கு மாங்காணத்தினை பொறுத்த வரையில் எல்லைப்பகுதியை பாதுகாப்பதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்கப்படவில்லை. வளமான காணிகளைக்கொண்டிருக்கின்றபோதிலும் அவற்றினை பயன்படுத்துவதற்கான எந்த நடவடிக்கையும் முன்னெடுக்காத நிலையே உள்ளது. இதன்காரணமாக வளமான காணிகள் அடையாளப்படுத்தப்பட்டு அவற்றினை அபகரிக்கும் செயற்பாடுகளை சிங்கள பேரினவாதிகள் முன்னெடுத்துவருகின்றனர்.

இன்று மலையக மக்களும் காணி உரிமைகள் அற்றவர்களாக இன்னும் அடிமை நிலையில் உள்ளபோது நாங்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் காணிகளை வைத்துக் கொண்டு அவற்றினை பாதுகாப்பதற்கு தவறி வருகின்றோம். இந்த நிலையில் எமது பகுதிகளை பாதுகாத்து வடகிழக்கு தமிழர்களின் இருப்பினை உறுதிப்படுத்த வேண்டுமானால் முடியுமான வரையில் கிழக்கின் எல்லைப்பகுதிகளில் மலையக மக்களை குடியமர்த்தி அவர்களுக்கு தேவையான வசதிகளையும் தொழில்வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்கும் போது எதிர்காலத்தில் கிழக்கின் இருப்பினை ஓரளவு பாதுகாக்கமுடியும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

இன்று எந்தவழியும் இல்லாமல் தமது எதிர்கால சந்ததியின் இருப்புக்காக ஏங்கிவரும் மலையக உறவுகளுக்கு கைகொடுத்து எமது இருப்பினையும் பாதுகாப்பதற்கான ஒரு வழியாக இது கைக்கொள்ளப்படுமானால் எதிர்காலத்தில் வடகிழக்கில் பல மாற்றங்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகளவில் உள்ளன. இது தொடர்பில் தமிழ்தேசிய பரப்பில் உள்ளவர்கள் சிந்தித்துசெயற்படவேண்டும் என்ற கோரிக்கையினை இங்கு முன்வைக்கவிரும்புகின்றேன்.

• • •

# இடைவிலகல் ஏற்படுத்தும் தாக்கம்

துரைசாமி நடராஜா

பாடசாலை கல்வி அபிவிருத்தியில் தாக்கத்தை ஏற்படுத்தும் பல்வேறு காரணிகள் காணப்படுகின்றன. அவற்றுள் மாணவர் இடைவிலகல் தற்போது பாரிய ஒரு பிரச்சனையாக உருவெடுத்துள்ளது. பாடசாலையின் கெடுபிடிகள், சமகால பொருளாதார நெருக்கடிகள் எனப்பலவும் இடைவிலகலில் செல்வாக்கு செலுத்தி வருகின்றன. இந்நிலையில் நாட்டின் ஏனைய பாடசாலைகளைக் காட்டிலும் மலையக பாடசாலைகளில் இடைவிலகும் மாணவர்களின் எண்ணிக்கை அண்மைகாலமாக இருமடங்காக அதிகரித்துள்ளது. கல்வித்துறையில் மேலெழும்ப வேண்டிய மலையக சமூகத்துக்கு இது ஒரு பேரிடியாகும் என்ற நிலையில் இடைவிலகலைக் கட்டுப்படுத்த கல்விச் சமூகத்தினரும் ஏனையோரும் கணிசமான பங்களிப்பினை வழங்க வேண்டிய ஒரு தேவை மேலெழுந்துள்ளது.



குடும்பம், சமூகம், நாடு என்று எல்லா மட்டங்களிலும் கல்வியின் வகிபாகம் மிகவும் அதிகமானதாகும். கல்வி தங்கிவாழும் நிலைமைக்கு முற்றுப்புள்ளி வைக்கின்ற அதே வேளை ஒருவன் சமூகத்தில் தலைநிமிர்ந்து வாழ்வதற்கான வழிவகைகளையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது. கல்வியால் எழுச்சி பெற்ற சமூகங்கள் உலகில் அநேகமாகும். குறிப்பாக பின்தங்கிய சமூகங்கள் பலவும் முன்னிலைக்கு வருவதற்கு கல்வியே பிரதான உந்துசக்தியாக விளங்கி இருக்கின்றது என்பதனையும் மறுப்பதற்கில்லை. கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து உலக நாடுகள் கல்விக்கென அதிகளவு பணத்தை ஒதுக்கீடு செய்து வருகின்றன. இந்த வகையில் இலங்கையும் அதிகளவு பணத்தை கல்விக்கென வரவு செலவு திட்டத்தின் ஊடாக ஒதுக்கீடு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். கல்வி தொடர்பான சிந்தனைகள் மற்றும் முக்கியத்துவம் என்பன எல்லா மட்டங்களிலும் வலுப்பெற்று காணப்படுகின்ற நிலையில் பூரணத்துவம் மிக்க கல்வியினைப் பெற்றுக் கொள்வதில் பல சமூகங்களும் பல்வேறு இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றன. இதில் பின்தங்கிய சமூகங்களின் எதிர்கொள்ளுகை மிகவும் அதிகமானதாகும். இந்த வகையில் மலையக சமூகம் குறித்து நாம் நோக்குகையில் மலையக சமூகம் பூரணத்துவம் மிக்க கல்வியினைப் பெற்றுக் கொள்வதில் பல்வேறு சவால்களையும் சந்தித்து வருகின்றமை தெரிந்ததேயாகும்.

கல்வி என்பது முக்கியத்துவம் மிக்க ஒரு விடயமாக காணப்படுகின்ற நிலையில் கல்வியை கற்பதற்கான செலவுகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன. இதற்கு ஈடு கொடுக்கக்கூடிய வகையில் சமூகங்கள் தம்மை தயார்படுத்திக் கொள்ள வேண்டிய தேவை காணப்படுகின்றது. எனினும் இது பல சந்தர்ப்பங்களில் சாத்தியமாவதில்லை. பொருளாதாரத்தில் திருப்தியடைவதற்கு பல சமூகங்கள் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொண்டு வருகின்றன. இந்த வகையில் மலையக சமூகமும் உள்ளடங்குகின்றது. மலையக சமூகத்தின் வருவாய் ஈட்டல் குறைவடைந்து காணப்படும் நிலையில் இதர பல செலவுகளும் அதிகரித்து காணப்படுகின்றன. இதனால் கல்விக்கான செலவினை மேற்கொள்வதில் அவர்கள் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாகியுள்ளனர்.



மலையகம் பல அபிவிருத்தி இலக்குகளையும் இன்னும் எட்டவேண்டியுள்ள நிலையில் கல்வி இலக்கும் இதில் முக்கியமான ஒன்றாக விளங்குகின்றது. கல்வி மலையகம் தலைநிமிர்வதற்கு வாய்ப்பளிக்கின்றது. இந்த வகையில் மலையகத்தில் சமகாலத்தில் ஆரம்பக் கல்வித்துறை ஓரளவு வளர்ச்சி கண்டுள்ள போதும் உயர்கல்வித் துறை உரிய இலக்கினை எட்டுவதற்கு இன்னும் கூடிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது. பல்கலைக்கழகம் செல்லும் மலையக மாணவர்களின் எண்ணிக்கை 0.5 வீதமாக வருடாந்தம் காணப்படும் நிலையில் இத்தொகை மேலும் அதிகரிக்கப்பட வேண்டுமென்பதும் உண்மையாகும். இதே வேளை மலையக கல்வி அபிவிருத்திகருதி மலையக அடையாளத்துடன் கூடிய பல்கலைக் கழகம் அமைக்கப்பட வேண்டும் என்ற கோஷங்களும் வலுப்பெற்று வருகின்றன. மலையகத்திற்கென தனியான பல்கலைக்கழகம் அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை பேராசிரியர் அமரர் சோ.சந்திரசேகரன் ஆழமாகவே வலியுறுத்தி இருந்தார். இது தொடர்பில் முக்கியஸ்தர்கள் பலரையும் சந்தித்து அவர் பல்கலைக்கழகத்தின் முக்கியத்துவத்தை விளக்கிக்கூறி இருந்தார். எனினும் அவரது வாழ்நாளில் இதுசாத்தியமாகாத நிலையில்தற்போது நகர்ப்புற பல்கலைக்கழகம் தொடர்பான காய்நகர்த்தல்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எவ்வாறெனினும் உயர் கல்வி அபிவிருத்தி கருதியும், அடையாள உறுதிப்பாடு கருதியும் மலையகத்திற்கென தனியான பல்கலைக்கழகம் அவசியமாகவுள்ளது என்பதையும் கூறியதாக வேண்டும். கல்வியோடு மலையக இளைஞர், யுவதிகள் தொழில்வாய்ப்பினைப் பெற்றுக் கொள்ளவும் பல்கலைக்கழகம் கை கொடுக்கும்.



மலையகத்தின் கல்வித்தேவை அதிகமுள்ள நிலையில் பாடசாலைகள் இதற்கென அர்ப்பணிப்புடன்செயற்படவேண்டும்மாணவர்களின்அர்ப்பணிப்பும்இதில்முக்கியமானதாகும். எனினும் கொரோனாவின் ஆதிக்கம் அதனைத் தொடர்ந்த இலங்கையின் பொருளாதார நெருக்கீடுகள் என்பவற்றின் காரணமாக பாடசாலைகளில் மாணவர் இடைவிலகல் அதிகரித்து காணப்படுகின்றது. இது கல்வி எழுச்சிக்கு பாரிய சவாலாக அமைந்துள்ளது. போக்குவரத்துச் சீர்கேடு, நோய் நொடிகள், கல்வி ஈடுபாடின்மை போன்ற பலவும் மாணவர் இடைவிலகலிற்கு தூபமிடுகின்றன. இதனைக் காட்டிலும் சில பாடசாலைகளில் மாணவர்களை வழிநடத்தும் பிழையான அணுகுமுறைகள், ஆசிரியர்களின் பாரபட்சமான வெளிப்பாடுகள் மற்றும் நடத்தைக் கோலங்கள் என்பனவும் மாணவர் இடைவிலகலிற்கு வலுசேர்க்கின்றன என்பதையும் மறுப்பதற்கில்லை. கல்வி அபிவிருத்தியில் அதிபர், ஆசிரியர் உறவு, ஆசிரியர் மாணவர் உறவு, கல்வித் திணைக்களம் மற்றும் பாடசாலைகளுக்குள்ள உறவு, பாடசாலை மற்றும் சமூகத் தொடர்புகள் என்பன ஆதிக்கம் செலுத்துகின்றன. எனினும் சமகாலத்தில் மலையகத்தின் சில பகுதிகளில் இத்தகைய உறவுகள் ஒன்றோ அல்லது பலவோ சீர்குலைந்துள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதன் தாக்கம் கல்வித்துறையிலும் எதிரொலிக்கின்றது. கல்விப் பின்னடைவுகளுக்கும் இது ஏதுவாகவுள்ளது என்பது உண்மையாகும்.



இத்தகைய சீரற்ற உறவுகள் மாணவர்களின் இடைவிலகலுக்கும் காரணமாகியுள்ளன என்பதையும் குறிப்பிட வேண்டியுள்ளது. பாடசாலைகள் மாணவர்களின் வரவினைத் தூண்டும் வகையில் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். அடைவுமட்ட அபிவிருத்தி அதனூடாக பெறுபேற்று அபிவிருத்தி என்பனவும் இதனால் சாத்தியமாகும். எனினும் பாடசாலைகளில் மாணவர் வரவு மற்றும் கல்வி அபிவிருத்தியினை தூண்டும் வகையில் அல்லாத செயற்பாடுகள் பலவித குளறுபடிகளுக்கும் அடித்தளமிடுவதாக அமையும். அதிலொன்று மாணவர்களின் இடைவிலகலாகும் என்றால் மிகையாகாது.

பெரும்பாலும் ஆரம்பப்பிரிவுகளில் மாணவர் இடைவலிலகல் நிகழ்வது குறைவாகவுள்ளது. எனினும் இடைநிலைப் பிரிவு மற்றும் உயர் பிரிவுகளில் இடைவிலகல் அதிகரித்து காணப்படுகின்றது. தரம் ஒன்றுக்கு உள்வாங்கப்படும் மாணவர்கள் அனைவரும் க.பொ.த.சாதாரண தர பரீட்சையில் அமர்வதில்லை. பல மாணவர்கள் இடையில் இடைவிலகும் நிலையில் இவ்வாறு இடைவிலகுபவர்கள் கீழ்நிலைத் தொழில்களில் நகர்ப்புறங்களில் ஈடுபட்டு வருகின்றனர்சமூக பொருளாதார சமத்துவமின்மையாலும் போதியளவு கல்வி வசதியின்மையாலும் உருவாக்கப்பட்ட வறுமை நிலையே சிறுவர்களை தொழிலில் அமர்த்துவதற்கு மூலகாரணமாக இருக்கின்றது. என்று சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனம் வலியுறுத்தியுள்ளது. பொதுவான மட்டத்தில் நோக்குகையில் ஒரு நாடு செல்வந்த நாடாக மாறுகின்றபோது அந்நாட்டின் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்துகின்ற நிலை

தொடர்ச்சி 11 ஆம் பக்கம்

# ஜெனிவாவில் பேசவேண்டியதை ராமேஸ்வரத்தில் பேசலாமா?

புகழேந்தி தங்கராஜ்

ஒருவழியாக, 'இலங்கையில் நடந்தது இனப் படுகொலை தான்' என்கிற உண்மையை ஏற்றுக் கொண்டிருக்கிறது, இந்தியாவை ஆளுகிற பாரதீய ஜனதா கட்சி. அதன் இரண்டாம் நிலைத் தலைவரான அமித் அனில் சந்திர ஷா என்கிற அமித்ஷா, ராமேஸ்வரம் மண்ணில் நின்று, இந்த உண்மையைப் பிரகடனம் செய்திருக்கிறார்.




'காங்கிரஸ் மற்றும் தி.மு.க.வின் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில்தான் இலங்கையில் தமிழர்கள் இனப்படுகொலை நடந்து, தமிழக மீனவர்கள் பெருந்துன்பத்துக்கு ஆளானார்கள்...' என்பது அமித்ஷாவின் ஒப்புதல் வாக்குமூலம். இது அவரது டிவிட்டர் பக்கத்திலும் பதிவாகியிருக்கிறது. அண்ணாமலையின் நடைப் பயணத் தொடக்க விழாவில், இது மட்டும் தான் உருப்படியான அறிவிப்பு.

2009 இனப்படுகொலைக்குப் பிறகு, ஜெனிவாவில் தமிழினப் படுகொலை தொடர்பில் கொண்டுவரப்படுகிற தீர்மானங்கள், இனப்படுகொலைக்குத் துணைநின்ற நாடுகளால் வடிகட்டப்பட்டு, நீர்த்துப் போன நிலையிலேயே முன்வைக்கப் படுகின்றன. அத்தகைய உப்புசப் பற்ற தீர்மானங்களுக்கே ஓடி ஒளிந்து கண்ணாமூச்சி ஆடிய ஒரு துணைக்கண்டத்தின் உள்துறை அமைச்சர் இப்படிப் பேசியிருப்பது, பல்வேறு கேள்விகளை எழுப்புகிறது. அவற்றில் மூன்று கேள்விகள் முக்கியமானவை.

**இனப்படுகொலை இலங்கையைக் காப்பாற்றத் தலைகீழாக நிற்கிற இந்திய அரசு, திடீரென்று நேர்மாறாக நிற்பது ஏன் - என்பது முதல் கேள்வி.**

**இந்தியாவின் உள்துறை அமைச்சர் அமித்ஷா முன்மொழிந்திருப்பதை, பிரதமர் மோடியும், வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரும் எப்போது வழிமொழியப் போகின்றனர் - என்பது இரண்டாவது கேள்வி.**

இவ்வளவு நாள் பேசாமல் தேர்தல் நெருங்குகிற சமயத்தில் இப்படியெல்லாம் பேசி தமிழகத் தமிழர்களின் வாக்குகளை பிக்பாக்கெட் அடிக்க பாரதீய ஜனதா முயற்சிக்கிறதா என்பது மூன்றாவது கேள்வி. ராமேஸ்வரத்தில் மோடி போட்டியிடுவாரென்று பேசப்படுகிற நிலையில், இந்தக் கேள்வி தவிர்க்க இயலாதது.

இந்தக் கேள்விகளை எழுப்புகிறபோது, 2014 மார்ச் மாதம், ஜெனிவாவில் நடந்த ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக் கூட்டத்தை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள், இலங்கையின் போர்க்குற்றங்கள் குறித்து விசாரிக்க சர்வதேசப் பொறிமுறை அவசியமென்று வலியுறுத்தும் தீர்மானத்தை, அந்தக் கூட்டத்தில் முன்வைத்தன. அப்போது இந்தியா செய்த கேலிக்கூத்து மறக்க இயலாதது. அந்தத் தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பு நடந்த நாளில், ஜெனிவா பேரவை அரங்குக்குள் இருந்த பசுமைத் தாயகம் அமைப்பின் பிரதிநிதிகள், 'இந்தியாவின் நடவடிக்கை வினோதமாக இருந்தது' என்று அப்போதே கூறினர். அவர்களில் ஒருவரான வழக்கறிஞர் கே.பாலு அதுதொடர்பாக சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்ததும், நீதிமன்றம் அதைத் தள்ளுபடி செய்ததும் அதன் பின் நிகழ்வுகள்.

இலங்கையை இலங்கையே விசாரிக்க முடியாதென்பதைச் சுட்டிக்காட்டியே, சர்வதேச விசாரணைப் பொறிமுறையின் அவசியத்தை அமெரிக்கா வலியுறுத்தியது. குற்றவாளி இலங்கையின் ஆப்த நண்பர்களான சீனாவும் பாகிஸ்தானும் அமெரிக்கத் தீர்மானத்துக்கு எதிராக பிரச்சாரம் செய்தன.

தமிழினப்படுகொலை நிகழ்ந்த ஐந்தாண்டுகளுக்குப் பிறகு கொண்டுவரப்பட்ட அதிமுக்கியத்துவம் வாய்ந்த தீர்மானமென்று அதைக் குறிப்பிடுவது தவறில்லை. அந்தத் தீர்மானத்தை ஆதரிப்பது அல்லது எதிர்ப்பது – என்கிற இரண்டு நிலைப்பாடுகளில் ஒன்றைத்தான், இந்தியா எடுத்திருக்க வேண்டும். அதுதான் நேர்மை. அதுதான் அறம். அதற்கு நேர்மாறாக, அந்த வாக்கெடுப்பைப் புறக்கணித்து, தனது கோழைத்தனத்தை உலகறியப் பறைசாற்றியது. வாக்கெடுப்பின்போது நடுநிலை வகிக்கப் போவதாக முன்னதாகவே அறிவித்தும் விட்டது. இந்தியாவின் நடுநிலை என்பது, பாகிஸ்தான் மற்றும் சீனாவின் விருப்பத்தை நிறைவேற்றி, இக்கட்டிலிருந்த இலங்கையைக் காப்பாற்ற மேற்கொள்ளப்பட்ட மறைமுக சூழ்ச்சி.

இந்த சூழ்ச்சிகளை மீறி, ஜெனிவாவில் அமெரிக்காவின் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுவிடுகிற நிலை. தீர்மானத்தை நேரடியாக எதிர்த்து இலங்கையைக் காப்பாற்ற வாய்ப்பில்லை என்பது தெரியவந்ததும், சீனாவின் துணையுடன், குறுக்கு வழியில் பாய்ந்தது பாகிஸ்தான்.

சர்வதேசப் பொறிமுறையை நிறுவுவதற்கான நிதி ஆதாரம் ஐ.நா. மனித உரிமைகள் ஆணையகத்திடம் இல்லையென்றும், தீர்மானம் நிறைவேற்றப்பட்டாலும் அதைச் செயல்படுத்த இயலாதென்றும் கூறி, தீர்மானத்தை ஒத்திவைக்கும்படி கடைசி நொடியில் கோரியது பாகிஸ்தான்.

பாகிஸ்தானின் இந்த வாய்மொழி வேண்டுகோள் வாக்கெடுப்புக்கு விடப்பட்டபோது, அதற்கு ஆதரவாக வாக்களித்தார் ஜெனிவாவுக்கான இந்தியப் பிரதிநிதி திலீப் சின்ஹா. தீர்மானத்தின் மீது நடுநிலை வகிக்கப்போவதாக அறிவித்திருந்த இந்தியா, பாகிஸ்தானின் திடீர் வேண்டுகோள் விஷயத்திலும் நடுநிலை தான் வகித்திருக்க வேண்டும். அதற்கு முரணானதாக இருந்தது இந்தியப் பிரதிநிதியின் நடவடிக்கை. அவரது இந்தத் தடாலடி நடவடிக்கை, பாலு உள்ளிட்டவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

முன்னதாகவே அறிவிக்கப்பட்ட தீர்மானத்தின் மீதான வாக்கெடுப்பைப் புறக்கணிப்பதென்பது, இந்திய அரசியல் தலைமையின் முடிவாக இருந்திருக்கலாம். ஆனால், பாகிஸ்தானின் திடீர் வேண்டுகோளை ஆதரித்து வாக்களித்தது எவருடைய முடிவு? இது பில்லியன் டாலர் கேள்வி.




இதற்கு விடைகாண, நீதிமன்றத்தை அணுகினார் பாலு. நடுநிலை வகிப்பதாகத் தெரிவித்திருந்த இந்தியா, பாகிஸ்தானின் திடீர் முட்டுக்கட்டை முயற்சிக்குத் துணைபோனது எப்படியென்பது அவரது கேள்வி. இதற்கான அனுமதியை ஜெனிவாவில் இந்தியாவின் பிரதிநிதியான திலீப் சின்ஹா எவரிடமிருந்து பெற்றார் என்கிற அவரது கேள்வி நியாயமானது. ஆனால், திலீப் சின்ஹாவை நேரில் அழைத்து விளக்கம் பெற வேண்டும் என்கிற கோரிக்கையை நீதிமன்றம் ஏற்கவில்லை. வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஜெனிவாவில் இந்தச் சம்பவம் நடந்தது, 2014 மார்ச் மாதத்தில்! அப்போது அஸ்தமனத்தின் அருகில் இருந்தது ஐக்கிய முற்போக்குக் கூட்டணி. அதன்பிறகு ஆட்சி மாற்றம். மே 26ம் தேதி நரேந்திரமோடி பிரதமர் பொறுப்பை ஏற்கிறார். இலங்கை விவகாரத்தில் தவறிழைத்த, பாகிஸ்தானை ஆதரித்த, திலீப் சின்ஹா மீது மோடி அரசு நடவடிக்கை எடுத்ததாக இன்றுவரை தகவல் இல்லை.

எடுத்ததற்கெல்லாம் பாகிஸ்தான் மீது பாய்கிற பாரதீய ஜனதா கட்சி, மோடி பிரதமரான உடனேயே, பாகிஸ்தானுக்குத் துணைபோன திலீப் சின்ஹா மீது நடவடிக்கை எடுத்திருக்கலாம். அப்படிச் செய்திருந்தால், தமிழினப் படுகொலை குறித்த நிஜமான அக்கறை அதற்கு இருக்கிறது என்பதைப் போன்ற ஒரு தோற்றம் உருவாகியிருக்கக் கூடும். 9 ஆண்டுகளாக இதைப் போன்ற எந்த வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளாத மோடி அரசு, பதவிக்காலம் முடிகிற நிலையில் அமித்ஷாவை இப்படியெல்லாம் பேசவைப்பதற்குப் பெயர்தான் 'மோடி வித்தை.' மோடி பிரதமரான பிறகும், இலங்கை விவகாரத்தில் சோனியாவின் காங்கிரஸ் வகுத்த பாதைதான் இந்தியாவின் பாதையாக இருக்கிறது. கொன்று குவிக்கப்பட்ட ஈழத்துச் சொந்தங்கள் விஷயத்தில் இந்தியா இழைத்த துரோகத்தின் சுவடுகள் அழுத்தந்திருத்தமாகப் பதிந்திருக்கின்றன. இதில் காங்கிரஸ், பாரதீய ஜனதா என்கிற வித்தியாசமே கிடையாது. எங்கள் தொப்புள்கொடி உறவுகளின் உடல்கள்மீது ஆளாளுக்கு ஏறி மிதித்திருக்கிறார்கள். இலங்கை இனவெறி அரசு அரங்கேற்றிய தமிழினப் படுகொலைக்குத் துணைநின்றது காங்கிரஸ் செய்த துரோகமென்றால், இன அழிப்பில் ஈடுபட்ட குற்றவாளிகளைக் காப்பாற்றுவதில் கவனமாயிருக்கும் பாரதீய ஜனதாவின் துரோகம், பச்சைத் துரோகம்.

இந்தியாவின் துரோகத்தால்தான், ஈழத் தமிழ் மக்கள், லட்சோப லட்சம் உறவுகளை இழந்திருக்கிறார்கள்.... கண்ணெதிரில் நடந்த

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

# சிறிலங்காவின் மதவன்முறை உலகமெங்கும் பரப்புரை செய்யப்பட வேண்டும்.

# புலத்துத் தமிழர்களே எல்லா வேறுபாடுகளையும் மறந்து ஈழதேச மக்களாக ஒன்றாகி எழுங்கள்

## ஐ.நா.வின் மத வன்முறைகளால் பாதிப்புள்ளானவர்களுக்கான அனைத்துலக நாளான ஆகஸ்ட் 22இல் ஈழத்தில் பௌத்தமத வன்முறை உச்சம்

**காங்கேயன்**

ஐக்கிய நாடுகள் சபை மதத்திற்காக அல்லது நம்பிக்கைக்காக வன்முறைக்கு உள்ளானவர்களை நினைவு கூறும் அனைத்துலக நாளாக ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 22ம் திகதியை அனுசரித்து வருகிறது. இத்தினத்திற்கு இரண்டு முக்கிய நோக்குகள் உண்டு. ஒன்று மதம் அல்லது நம்பிக்கைச் சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமைகள் உடன் தொடர்புடையது என்பதால் அதற்காகப் பாதிப்புக்குள்ளானவர்களை நினைவு கூறுவதன் வழி மனித உரிமைகள் குறித்த விழிப்புணர்வை உறுதிப்படுத்துவது. அடுத்தது மதத்திற்காக அல்லது நம்பிக்கைக்காக வன்முறைக்குள்ளானவர்களுக்கு நடைமுறையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் பாதுகாப்பும் புனர்வாழ்வும் கிடைக்கச் செய்வது.

ஈழத்தமிழர்கள் இந்த இரண்டு தேவைகளையும் ஒருங்கே கொண்டவர்களாகச் சமகால அரசியலில் பிரித்தானிய காலனித்துவம் விலகிய கடந்த 75 ஆண்டுகளாகச் சிறிலங்காவின் பௌத்த சிங்கள அரசுகளால் தொடர்ச்சியாக இன அழிப்புக்கு உள்ளாகி வருகின்றனர்.



இவ்வீழத்தமிழ் மக்களையும் மதத்திற்காக அல்லது நம்பிக்கைக்காக வன்முறைக்கு உள்ளாகி வரும் மக்கள் என்ற வகைமைப்பாட்டுக்குள் நினைவு கூர்ந்து, அவர்களுக்குப் பாதுகாப்பும் புனர்வாழ்வும் கிடைக்க வழக்கில் உள்ள நடைமுறைச் சட்டங்கள் மூலம் ஐக்கிய நாடுகள் சபை உதவிட வேண்டும்.

இதனைச் செய்யுமாறு உலகெங்கும் உள்ள தமிழர்கள் ஐக்கியநாடுகள் சபையைக் கோர வேண்டிய பொறுப்புள்ள நாளாக ஒவ்வொரு ஆண்டும் இந்நாளை உலகத் தமிழர்கள் அமைத்துக் கொள்ள வேண்டும். .

இன்று சிறிலங்காவில் ஒருநாடு அது சிங்களநாடு, ஒருசட்டம் அது பௌத்த பீடாதிபதிகளின் பௌத்த ஆகமச் சட்டம் என்பதை அரசியலமைப்புச் சட்டமாக மாற்ற அரசியல் அமைப்புக்குழு அமைத்து, இலங்கையின் பன்முகத்தன்மையை ஏற்க மறுத்து இலங்கையின் மற்றைய மதநம்பிக்கை உடையவர்களை வன்முறைப்படுத்தும் அரசாக ராசபக்ச குடும்ப அரசு செயற்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந் நேரத்தில் 2021ம் ஆண்டின் மதத்திற்காக அல்லது நம்பிக்கைக்காக வன்முறைக்;கு உள்ளானவர்களை நினைவுகூறும் ஐ.நாவின் அனைத்துலகத் தினம் இடம்பெறுகிறது என்பதால் பௌத்தம் எவ்வாறு சிறிலங்காவில் ஒரு அரசியல் மேலாண்மைத் தத்துவமாக உருமாற்றம் செய்யப்பட்டு பௌத்த மடாதிபதிகளும் பிக்குகளும் நேரடியாக நாட்டின் அரசியல் சட்ட ஒழுங்கு முறைகளை மீறி அமுக்கக் குழுக்களாகச் செயற்படுகின்றனர் என்பதை இந்நாளில் உலகுக்கு உலகத் தமிழர்கள் உரக்க உரைத்திட வேண்டும்.



சிங்கள பௌத்த பேரினவாதிகள் 1956ம் ஆண்டில் புத்தர் பரிநிர்வாணம் அடைந்த 2500ம் ஆண்டின் உறுதிமொழியாக " இலங்கை புத்தர் எங்களுக்குத் தந்த எங்களுடைய பௌத்த சிங்கள நாடு – இலங்கையின் ஆட்சி மொழி எங்களுடைய சிங்களமொழி – எங்களுடைய பௌத்த ஆகமம் எல்லாவற்றுக்கும் மேலாகப் போற்றப்பட வேண்டும்". இவற்றுக்கே இலங்கையில் அரசியல் முன்னுரிமை என்ற கோசத்தை எஸ் டபிள்யூ. ஆர். டீ பண்டாரநயாக்காவின் சிங்களம் மட்டும் சட்டவாக்கம் மூலம் நாட்டின் சட்டமாக்கும் முயற்சியைத் தொடங்கினர். இதுவே சிங்கள பௌத்த பேரினவாதிகள் தமிழரைக் கொன்றழிக்கவும் வீட்டை விட்டுத் துரத்தவும் தங்களுக்கு உரிமையுண்டு என்கிற வேகத்தைப் பெறவைத்தது.

அன்று முதல் இன்று வரை பௌத்த சிங்களவர்களுக்கு முன்னுரிமை என்பதையே தங்களின் அரசகொள்கையாக எல்லா சிங்கள அரசுகளுமே தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றன. சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையைச் சிங்கள பௌத்த குடியரசாக 22.05.1972இல் பிரகடனப்படுத்தி, ஈழத்தமிழர்களை நாடற்ற தேச இனமாக்கினார்.



ஜே. ஆர். ஜயவர்த்தனா நிறைவேற்று அதிகாரமுள்ள ஜனாதிபதி ஆட்சி முறையை 1978இல் தோற்றுவித்து பாராளுமன்றச் சட்ட வாக்க அதிகாரத்தையும் நிர்வாகத்தையும் சட்ட அமுலாக்கலையும் வலுவேறாக்கலின்றி சிறிலங்காவின் அரச அதிபரிடம் குவிய வைத்தார். படைகள் கண்ட இடத்தில் சுடவும் சுட்ட இடத்தில் எரிக்கவும் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் மூலம் அதிகாரங்களைப் படைத் தலைமைகளுக்கு வழங்கினார். இதன்வழி உருவானதே இன்று வரையான ஈழத்தமிழின அழிப்புக்கான நியாயப்படுத்தலான நாட்டின் தேசிய பாதுகாப்புக்கான நடவடிக்கை என்னும் தத்துவம்.



இந்த சிங்கள பௌத்த ஈழத்தமிழின அழிப்புத் தத்துவத்திலிருந்து தமிழ் இளையவர்கள் ஆயுத எதிர்ப்பு மூலம் போராடுவதற்கான பயிற்சிகளையும் ஆயுத வழங்கலையும் செய்து உதவியவர் 1972- 1983க் கிடைப்பட்ட காலத்துப் பாரதப் பிரதமர் இந்திராகாந்தி அவர்கள். இவரது காலத்தில் சிறிலங்காவின் இறைமையை மீறி இந்திய விமானப்படை விமானங்கள் பாதிக்கப்பட்ட வல்வெட்டித்துறைத் தமிழ்ப்பகுதிகளின் மேல் உணவு வழங்கலைச் செய்து ஈழத்தமிழர் வெளியக சுயநிர்ணய உரிமைக்கு உலகம் குரல் கொடுக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தினார். 1983ம் ஆண்டு ஆடித் தமிழினஅழிப்பைஅடுத்துஇந்தியாஆர்ஜென்டீனா மூலம் ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபைக்கு ஆடி இனக்கலவரப் பிரச்சினையைக் கொண்டு சென்று ஈழத்தமிழர் பிரச்சினையைச் அனைத்துலகப் பிரச்சினையாகவும் மாற்றியது. இந்தக் காலகட்டத்தில் இந்திரா காந்தி அவர்களின் மறைவை அடுத்து சிறிலங்கா ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா இந்தியாவுக்கு ஈழத்தமிழர்கள் மேலிருந்த அக்கறைய்யும் ஆர்வத்தையும் திசை திருப்பும் இலங்கை இந்திய உடன்படிக்கையைச் செய்வித்து ஈழத்தமிழர்களுடைய போராட்ட முயற்சிகளைத்தனிமைப்படுத்த முயன்றார். அடுத்த அரசத்தலைவரான சந்திரிகா பண்டாரநாயக்க தமிழ்மக்களிடை இருந்து தமிழ் மக்களுக்காக தமிழ் மக்களின் தாயக விடுதலை அமைப்பாக எழுந்த தமிழீழ விடுதலைப்புலிகளையும் மக்களையும் வேறு வேறு என்னும் அரசியல் தந்திரத்தைக் கையாண்டு தான் புலிகளை ஒடுக்குவதாகத் தமிழர்களை இனஅழிப்பு செய்ததும் அல்லாமல்



தொடர்ச்சி 11ஆம் பக்கம்

# மொறொக்கோ மகளிர் அணியின் சாதனையும் பாலின சமத்துவப் பயணமும்

தமிழில்: **ஜெயந்திரன்**

இந்த மாதத்தின் தொடக்கத்தில், பெண்களுக்கான உலகக் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியில் தாம் பங்குபற்றிய முதலாவது சந்தர்ப்பத்திலேயே, கொலம்பியாவைத் தோற்கடித்து, ஜேர்மனியை வெளியேற்றி, பீபா *(Fifa)* உலகக்கிண்ணத்தின் இறுதி 16 நாடுகளுக்குள் ஒன்றாகத் தேர்வாகி, மொறொக்கோவின் அற்லஸ் லயனெஸஸ் *(Allas Lionesses)* என்ற அணி வரலாற்றைப் படைத்திருந்தது. அதன் பின்னர் பிரான்ஸ் அணியிடம் தோல்வியடைந்த இந்த மொறொக்கோ உலகக் கிண்ணப் போட்டிகளிலிருந்து வெளியேறியது. இவ்வாறு பின்னர் தோல்வியைத் தழுவிய போதிலும், உலகம் பூராவும் இருக்கின்ற பல மில்லியன் எண்ணிக்கையான உதைபந்தாட்ட ரசிகர்களின் இதயங்களை இந்த அணியைச் சேர்ந்தவர்கள் கொள்ளைகொண்டிருக்கிறார்கள்.



உலகக் கிண்ண வரலாற்றில் யாரும் முன்னொரு போதும் அடைந்திராத சாதனையைப் படைத்து வலம் வந்த இந்தப் புதிய அணி, உதைபந்தாட்டத்தில் தமது மிகச் சிறந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி, தமது சொந்த நாட்டுக்குப் பெருமை சேர்த்திருப்பதுடன் மட்டும் நின்றுவிடவில்லை. அதற்கு மாறாக, தமது நாட்டிலும், அதற்கு அப்பாலும் பெண்க ளின் ஆற்றல்கள் எவ்வளது தூரத்துக்குப் போகலாம் என்பதற்கான அடையாளமாகவும் மாறியிருக்கிறார்கள். பெண்களது விளையாட்டுகளைப் பொறுத்த வரையில், மிகவும் சிறப்பாகத் திட்டமிடப்பட்டு, நேர்த்தியாக ஒழுங்கு செய்யப்பட்ட முதலீடுகள், உலகளாவிய ரீதியில் வெற்றிகளைக் குவிப்பது மட்டுமன்றி, பாலின சமத்துவத்தை நிலைநிறுத்தும் பயணத்திலும் முக்கிய முன்னேற்றங்களை ஏற்படுத்தக்கூடியது என்பதையும் சுட்டிக்காட்டியிருக்கிறது.

பொதுவாக மொறொக்கோ நாட்டிலும், குறிப்பாக அந்த நாட்டில் வாழும் பெண்கள் மற்றும் இளம் பெண்கள் நடுவிலும் அற்லஸ் லயனெஸஸ் அணியின் வெற்றி மிகவும் ஆழமான தாக்கத்தைத் தோற்றுவித்திருக்கிறது. இது வெறும் விந்தையாக மட்டுமன்றி, விளையாட்டுகளில் கட்டமைப்பு ரீதியாக ஏற்படுத்தப்படும் முதலீடுகள், சமூகத்தில் எவ்வாறான மாற்றங்களைக் கொண்டுவரமுடியும் என்பதற்கும் ஓர் சிறந்த எடுத்துகாட்டாக மாறியிருக்கிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளின் தொடக்கத்திலிருந்தே, மொறொக்கோ அரசரான ஆறாவது மொஹமட், இளம் விளையாட்டு வீரர்களை ஊக்குவிப்பதற்காக பலவிதமான திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகிறார். இவ்வாறான முயற்சிகளின் ஒரு பகுதியாக, 2009ம் ஆண்டில் வினைத்திறன் மிக்க ஆறாவது மொஹமட்டின் உதைபந்தாட்டக் கல்லூரியைத் தாபித்தது மட்டுமன்றி, நாடு முழுவதும் உயர் தரத்திலான உதைபந்தாட்ட மைதானங்களையும் உருவாக்கியிருக்கிறார். மிக அதிகமான நிதி உதவி, உதைபந்தாட்டத்துக்குத் தேவையான உட்கட்டமைப்புகள், மற்றும் முழுமையான பயிற்சித்திட்டங்கள் போன்றவற்றை வழங்கி, பெண்களின் உதைபந்தாட்டத்துக்கு அவர் சிறப்பான விதத்தில் ஆதரவளித்திருக்கிறார்.

கடந்த ஆண்டில், ஆபிரிக்கக் கிண்ணத்துக்கான இறுதிப் போட்டிக்கு மொறொக்கோ தகுதியைப்பெற்ற பொழுது, இந்த முயற்சிகளின் தாக்கம் வெளிக்கொணரப்பட்டது. மொறொக்கோவின் இந்தப் பெண்கள் அணி அரும்பொட்டில், தென்னாபிரிக்க அணியிடம் தோல்வியைத் தழுவிய பொழுதிலும் அனைத்துலகத் தளத்தில், தான் ஒரு பலமான அணி என்பதை நிரூபித்திருக்கிறது.

பெண்களின் உதைபந்தாட்டத்தை முன்னேற்ற, மொறொக்கோ நாடு எடுத்து வரும் முயற்சிகள் வெறுமனே வெற்றிக் கிண்ணங்களைப் பெறுவதை நோக்கமாகக் கொண்டிருக்கவில்லை. விளையாட்டுத் துறையில் கணிசமான அளவு முதலீடுகளைச் செய்வதன் மூலம், பெண்கள் தொடர்பாக சமூகத்தில் நிலவுகின்ற விதிமுறைகளை மாற்றி அமைத்து, விளையாட்டுத்துறையில் பெண்களும் அதிகமாகப் பங்கெடுக்கக்கூடிய ஒரு சூழமைவை தோற்றுவித்து வருகிறது.



உலகக் கிண்ணப் போட்டியில், ஹிஜாப் *(Hijab)* அணிந்து களமாடிய முதலாவது முஸ்லீம் பெண் என்ற பெருமையைத் தனதாக்கிக் கொண்ட நுஹைலா பென்ஸீனாவைப் *(Nuhaila Benzina)* போட்டியாளராகக் கொண்டிருக்கின்ற மொறொக்கோ அணி, தனது இலக்கை ஏற்கனவே அடைந்துவிட்டது. உலகம் பூராவும் வாழ்கின்ற உதைபந்தாட்ட ரசிகர்களைக் குறிப்பாக முஸ்லீம் பெண்களைப் பொறுத்தவரையில், ஆண்களுக்கு ஈடாக உதைபந்தாட்ட மைதானம் தங்களுக்கும் சொந்தமானது என்பதையும் எவ்வாறு ஆண்களது உதைபந்தாட்டம் மக்களது கவனத்தை ஈர்க்கின்றதோ அதே போல, தங்களது உதைபந்தாட்டமும் முக்கியமானது என்றும் அதே அளவு நன்மைகளை ஏற்படுத்தவல்லது என்பதையும் அற்லஸ் லயனஸஸ் அணியின் இந்த வெற்றி நிரூபித்திருக்கிறது.

இவ்விடயம் தொடர்பாக மொறொக்கோ நாட்டில் வாழ்ந்துகொண்டிருக்கின்ற பெண்களுடனும் புலம்பெயர்ந்து வாழும் பெண்களுடனும் இந்த அணியின் வெற்றி தொடர்பாக நான் உரையாடியிருக்கிறேன். பிரான்சில் தனது குடும்பத்தினருடன் சேர்ந்து உலகக் கிண்ணப் போட்டிகளை தான் பார்த்து வருவதாகவும் உதாரணமாகப் பெண்களது உதைபந்தாட்ட அணியில் தனக்கு ஏற்பட்டிருக்கும் இந்த ஆர்வம் தொடர்பாகத் தானே ஆச்சரியப்படுவதாகவும் அதேவேளையில், "தொலைக் காட்சியில் பெண்களுக்கான உதைபந்தாட்டப் போட்டிகளைக் கண்டுகளித்துக் கூச்சலிடுவேன் என்று நான் எதிர்பார்க்கவில்லை... விளையாட்டில் பெண்கள் அடைந்திருக்கும் வெற்றியைச் சுவைப்பது மிகவும் இனிமையான ஒரு அனுபவமாக இருந்தது" என்று 23 வயது நிரம்பிய சௌகானியா தனது உணர்வுகளை வெளிப்படுத்தினார். "என்னைப் போன்றே ஹிஜாப் அணிந்த ஒரு பெண் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடுவது எனக்குப் பெருமையாக இருந்தது. இவ்விடயத்தில் மொறொக்கோ நாட்டுப் பெண்கள் முன்னோடிகளாக இருப்பது தொடர்பாக நான் மகிழ்ச்சியடைகிறேன். மொறொக்கோ நாட்டைச் சேர்ந்த ஒரு முஸ்லீம் பெண்ணாக இருப்பது தொடர்பாக நான் உண்மையில் மிகவும் பெருமை அடைகிறேன்" என்று 24 வயது நிரம்பிய அமீனா கூறினார்.

இருப்பினும், பெண் சமத்துவம் தொடர்பாக எமது இலக்கை நாம் அடைந்துவிட்டோம் என்றோ அல்லது விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் மொறொக்கோ பாலின சமத்துவத்தை அடைந்துவிட்டதோ என்றோ இங்கு நான் சொல்ல வரவில்லை. வீடு தான் பெண்ணுக்குரிய இடம், ஒவ்வொரு பெண்ணும் தான் ஒரு நல்ல மகளாகவோ, தாயாகவே அல்லது மனைவியாகவோ இருப்பதையே ஆசிக்கவேண்டும் என எண்ணுபவர்கள் பலர் இன்றும் மொறொக்கோவில் இருக்கிறார்கள். கல்வி மற்றும் விளையாட்டில் பெண்கள் ஈடுபடுவதை ஆதரிக்கின்றவர்கள் கூட, ஆண்களுக்கான விளையாட்டு எனக் கருதப்படுகின்ற உதைபந்தாட்ட விளையாட்டை ஒரு பொழுபோக்காக விளையாடுவதற்குக்கூட தங்களது பெண்பிள்ளைகளை அனுமதிப்பதில்லை. தொழில்வாரியான *(professional)* ஒரு உதைபந்தாட்ட வீராங்கனையாக வருவது மொறொக்கோவின் பெரும்பாலான பெண்களுக்கு இன்னும் ஒரு தூரத்துக் கனவாகவே இருக்கிறது.

மொறொக்கோ வீராங்கனைகள் சாதித்திருக்கும் அண்மைய வெற்றி இந்தச் சமூக விதிமுறைகளை மாற்றியமைக்கத் தொடங்கியிருக்கிறது. தற்போது அடைந்திருக்கும் முன்னேற்றங்கள் நிரந்தர முன்னேற்றங்களாக அமைவதற்கு பெண்களுக்கான உதைபந்தாட்டத்திலும் ஏனைய பெண்களுக்கான விளையாட்டுகளிலும் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் மேலும் தொடரப்பட வேண்டும்.



மொறொக்கோ பெண்கள் அணியின் மனந்தளராது கடுமையாகப் போராடும் பண்பு, மனத்திடம், எதிர்ப்புகளை வெற்றி கொள்ளல் போன்ற பண்புகள், தம் முன்னே இருக்கின்ற வாய்ப்புகள் தொடர்பாக ஒரு முற்றிலும் புதிய புரிதலை மொறொக்கோப் பெண்களுக்கு வழங்கியிருப்பது மட்டுமன்றி பெண்கள் தொடர்பாக சமூகம் கொண்டிருக்கின்ற எதிர்பார்ப்புகளையும் முற்றிலும் மாற்றியமைத்திருக்கிறது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்

## சிறிலங்காவின் ... தொடர்ச்சி ...

அனைத்துலகம் ஈழத்தமிழர் பிரச்சினைக்கு அமைதிவழித் தீர்வு காண முயற்சித்த நோர் வேயின் சமாதான முயற்சிகளையும் தாமதப் படுத்தினார். முன்வைக்கப்பட்ட இடைக்கால நிர்வாகத்தைத் வழங்காது தாமதப் படுத்தி ஈழத்தமிழர்களின் அரசு நோக்கிய அரசநிலையைச் சிங்கள அரசுக்குச் சமானமான முறையில் மதித்த உலகை அந்நிலையில் இருந்து மாறச் செய்தார். இதன்வழி கூட்டாட்சி ஒன்றின் மூலம் அமைதி ஏற்படுவதற்குரிய முறையில் வளர்ந்து வந்த வளர்ச்சியை அவர் முறியடித் தார். இவரின் பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா தமிழர்களின் ஆயுத எதிர்ப்பை இல்லாதொழிப்பதற்கான அனைத்துலக வலைப் பின்னலையும் உருவாக்கிப் பின்னர் முள்ளி வாய்க்கால் ஈழத்தமிழின அழிப்பு மூலம் ராசபக்ச குடும்ப ஆட்சி இலங்கையில் உருவாகப் பேருதவி புரிந்தார்.

இந்தப் பின்னணியில் இன்று ராசபக்ச குடும்பம் பௌத்த மகாசங்கங்களின் பணி வான தலைமைகளாகத் தம்மைச் சிங்கள பௌத் தர்கள் முன் வெளிப்படுத்தி ஈழத்தமிழின அழிப்பை தமிழர்களினதும் தமிழ்பேசும் முஸ்லீம்களினதும் மத மற்றும் நம்பிக்கைகளை வன்முறைப்படுத்தி இனஅழிப்பு மூலம் 1,46000 க்கும் மேலாக ஈழத்தமிழர்களைக் கொன்றழித்த ஆட்சியாளர்களாகவும் பதினைந்து இலட்சம் தமிழரை இனங்காணக் கூடிய அச்சத்தை ஏற்படுத்தி தங்கள் சொந்த மண்ணை விட்டு வெளியேற வைத்து, இன்றும் படைபல ஆட்சியை சனநாயக ஆட்சி என நடாத்துபவர்களாகவும். தொடர்கின்றனர். இந்த சிங்கள மதமொழியின மேலாண்மையை அரச கொள்கையாகவே ஒவ்வொரு சிங்களப் பெரும்பான்மை அரசும் ஈழத்தமிழின அழிப்பை முன்னெடுப்பதற்கான தத்துவமாக பௌத்த ஆகமத்தையும் கட் டளைக் கோபுரங்களாக பௌத்த மகாசங்கங் களையும் முன்னிலைப்படுத்துகின்றது. இது ஒரே நாடு ஒரே சட்டம் கொள்கையை நடைமுறைப் படுத்துவதற்கான அரச தந்திரோபாயமாகவும் உள்ளது. .

இன்று ஈழத்தமிழின அழிப்புக் கொள்கை வழி ஆட்சி செய்யும் ரணில் விக்கிரமசிங்கா பௌத்த மதத்தின் பேரால் தான் தமிழர்களின் நம்பிக்கைக்காக அவர்களை வன்முறைப்படுத்தி வருவதை உலகுக்கு நியாயப்படுத்த, தமிழர் களின் தாயகப்பகுதிகளையே பௌத்த மண் எனப் பிரகடனப்படுத்தி, அரச அதிபர் செயலணிக் குழுக்களையே நிறுவினார் கோட்டபாயா. ராசபக்ச குடும்ப ஆட்சியை விட தமிழ்மொழி மூலம் தமிழர்கள் வழியாக பௌத்தம் இலங்கையில் பரவிய தொன்மை வரலாற்றால் தமிழர் பகுதிகளில் காணப்படக்கூடிய பௌத்த மதத் தொல்பொருட்களைச் சிங்களவர்களுடைய ஆட்சி யின் சின்னங்கள் எனத் திரிபுவாதம் செய்வதற்கான அனைத்து முயற்சிகளையும் கோத்தபாயா படைபல நிர்வாகம் கொண்டு செய்து முடித்தார். தற்போது ரணில் விக்கிரமசிங்காவின் ஆட்சியில் சைவஆலயங்கள் பௌத்த தொல்லியல் வழிபாட் டுத்தலங்கள் மேல் கட்டப்பட்டுள்ளன என அவற்றில் ஈழத்தமிழர் உரிமையை மறுத்து அவற்றை முழுமையாகவோ பகுதியாகவோ இடித்தழித்து தமிழர்களின் தாயக நிலங்களை ஆக்கிரமித்து அவற்றை அபகரித்துச் சிங்கள மயமாக்கும் செயற்பாட்டை வேகப்படுத்தியதும் அல்லாமல் படையினர் குடியிருப்பாளர்களாகவும் அந்த நிலங்களை மாற்றி வருகின்றது. இதுவே குருந்தூர் மலை முதல் இன்றைய ஆதிசிவன் ஆலயம் வரை பௌத்த நில ஆக்கிரமிப்பு தந்திரோபாயமாகத் தொடர்கிறது. அதே வேளை தமிழர்களின் கண்ணியமான வாழ்வுக்கு வழி செய்யுமாறு பாரதப் பிரதமர் நரேந்திரமோடி அவர்களின் அரசின் வேண்டுகோள் வெளிவந்த மறுவினாடியே இலங்கையில் அரசியல் அதிகாரப் பரவலாக்கல் என்ற பேச்சுக்கே இடமில்லை என ராசபக்ச சகோதரர்கள் கூட்டுப் பதில் அளித்து, இலங்கையில் மற்றைய மத இன உரிமைகளைத் தாங்கள் வன்முறைப்படுத்தல் தங்களைப் பெரும்பான்மை வாக்குகளால் தெரிவு செய்த சிங்கள மக்களுடைய ஆணையைத் தாங்கள் முன்னெடுக்கும் செயற்பாடு என நியாயப்படுத்தியும் வருகின்றனர். .

இந்த உண்மைகளை உலகுக்கு உரக்கச் சொல்லி ஈழத்தமிழர்களின் அரசியல் உரிமைகள் மறுப்பு என்பது, சிறிலங்கா, மதத் திற்காக அல்லது நம்பிக்கைக்காக ஈழத்த மிழரை வன்முறைப்படுத்தும் அரசியல் செயல்-திட்டமாகவும் பார்க்கப்படக் கூடியது என்பதை வெளிப்படுத்த வேண்டும். இந்த வகையிலும் இதனை அணுகி ஈழத்தமிழர்களுக்கு அரசியல் உரிமைகள் மீள ஐக்கியநாடுகள் சபையும் அனைத்துலக நாடுகளும் ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையைக் காலந் தாழ்த்தாது ஏற்று அவர்களுக்கு உதவுமாறு வேண்டு வது உலகத் தமிழரின் இந்நாளின் கடமையாக உள்ளது

• • •

## இடைவிலகல் ... தொடர்ச்சி ...

குறைவடைந்து செல்லும்.

இதேவேளை வீட்டுத்துறையினரது வரு மானம் மற்றும் சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தலுக்குமிடையே எதிர்க்கணிய தொடர்பு காணப்படுகின்றது. பெருந்தோட்டத் துறையில் குடும்பப் பருமன் உயர்வாக இருத்தல், குறைந்த கூலிவீதம் என்பன வறுமையை தோற்றுவிக்கும் நிலையில் அது சிறுவர்களை தொழிலுக்கு அமர்த்தும் நிலையினை உயர்த்தியுள்ளது என்று புத்திஜீவிகள் வலியுறுத்துகின்றனர். இந்த வகையில் பெருந்தோட்டத் துறையில் 14 வயதிற்கு உட்பட்ட சிறுவர்களில் 10.3 வீதமான ஆண் பிள்ளைகளும், 14.6 வீதமான பெண் பிள்ளைகளும் தொழில் புரிவதாக அண்மைக்கால அறிக்கையொன்று தெரிவிக்கின்றது. இதற்கேற்ப 14 வயதுக்கு உட்பட்ட 12.4 வீதமான பிள்ளைகள் ஏதோ ஒரு காரணத்தால் தொழில் புரிவதற்காக தள்ளப்பட்டுள்ளமையை அறிந்து கொள்ள முடிகிறது. இதனிடையே நகர்ப்புறங்களில் தொழில்புரியும் சிறுவர்கள் கலாசார ரீதியான சீரழிவுகளுக்கும் முகம்கொடுத்து வருகின்றனர். இதனால் இவர்கள் தங்கிவாழும் குடும்பங்களும் சில வேளைகளில் கலாசார ரீதியான சீரழிவுகளுக்கு முகம் கொடுக்க நேரிடுகின்றது. பாடசாலைகளில் இருந்து இடைவிலகும் மாணவர்கள் சிலர் போதைவஸ்துப் பாவனைக்கு அடிமையாகி தமது வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருப்பதும் புதிய விடயமல்ல.பாட சாலைகளில் இடைவிலகும் மாணவர்களின் நிலைமைகள் பல மாணவர்களின் எதிர்காலத்தை சூனியமாக்கி இருக்கின்றன. அறியாத பருவத்தில் பொருளாதார நெருக்கடி உள்ளிட்ட காரணங்களால் இடைவிலகலை மேற்கொள்ளும் பிழையான முடிவுகள் பிற்காலத்தில் அவர்களின் வாழ்க்கையில் மிகப்பெரிய பள்ளத்தை ஏற் படுத்தி விடுகின்றன. மலையகத்தைப் பொறுத் தவரையில் இளவயது திருமணங்கள் இப்போது அதிகரித்து வருகின்றன. இவ்வாறாக இளவயது திருமணங்கள் அதிகரிப்பதற்கு இடைவிலகலும் ஒரு காரணமாகும் என்பதனை புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே மாணவர்களின் இடைவிலகலைத் தவிர்த்து கல்விப் பாதையில் இவர்களை உரியவாறு பயணிக்கச் செய்வது மிகவும் அவசியமாகின்றது. இதில் பெற்றோரின் வகி பாகமும் அதிகமாகும். பெற்றோர் வலிகளை பொறுத்துக்கொண்டு மாணவர்கள் பூரண கல்வியினைப் பெறுவதற்கு வாய்ப்பளிக்க வேண்டும். தனது பிழையான செயற்பாடுகளால் பிள்ளைகள் அதளபாதாளத்தில் வீழ்ந்துவிடு வதற்கு ஒருபோதும் இடமளிக்கலாகாது.

• • •

## தொடர்ந்து வரும் ... தொடர்ச்சி ...

இந்தக் கப்பல் சீனாவின் குவாங்சோவை தளமாக கொண்டு செயற்படும் ஒரு இராட்சக் கப்பல். தற்போது தென் சீனக் கடலில் இருந்து நகர ஆரம்பித்துவிட்டது. இலங்கையை அடையும் இக் கப்பலானது இலங்கையின் தேசிய நீர் வளா ஆராய்ச்சி மற்றும் அபிவருத்தி முகவரான நாராவின் ஆராச்சியிலும், தென் இந்திய பெருங் கடலையும் ஆய்வு செய்யும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக இந்தியா இப்பகுதியில் உள்ள தனது கடற்படையின் கண்காணிப்பு கப்பலை உசார் செய்வதோடு மேலும் இரு கப்பல்களை ஒக்டோபர் மாதத்திற்கு முன்னர் இப்பகுதிக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளது.

சீனக் கப்பல்களின் தொடர் வருகையும், இந்தியா அது தொடர்பில் வெளிப்படுத்தும் கரி சனை குறித்த இலங்கை அரசாங்கத்தின் அல ட்சியமும் பிராந்தியத்தில் இராஜதந்திர ரீதியிலான ஒரு முறுகல் நிலையைத் தோற்றுவிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இலங்கையைப் பொறுத்தவரையில் இந்தியா என்னதான் ஆட் சேபனை தெரிவித்தாலும், அதனால் அதற்கு மேலாக எதுவும் செய்ய முடியாது என்ற கருத்தைக் கொண்டுள்ளது. இதற்கு மேலாக இந்தியாவினால் என்ன செய்ய முடியும் என்பதை புதுடில்லிதான் வெளிப்படுத்த வேண்டும்.

## அமெரிக்கா, ... தொடர்ச்சி ...

மூன்று நாடுகளுக்கிடையிலான தகவல் தொடர்பு வழிமுறைகளை அதிகரிப்பது மற்றும் விநியோகச் சங்கிலி முன்கூட்டிய எச்சரிக்கை அமைப்பை அமைத்தல் உள்ளிட்ட அவர்களது உறவை மேலும் நிறுவனமயமாக்கான முயற்சிகள் குறித்து ஆராய்ந்தனர். பிராந்திய நெருக்கடிகளுக்கு பதிலளிக்க நேரடித் தொடர்பு ஒன்றை அமைக்கவும், வட கொரிய ஏவுகணைகள் குறித்த தரவுகளை நிகழ்நேர பகிர்வுகளை தொடங்கவும், அரசாங்க நிறுவனங்களில் வருடாந்திர முத்தரப்பு சந்திப்புகளை நடத்தவும் திட்டமிட்டுள்ளது. எவ்வாறாயினும், மூன்று நாள் உச்சிமாநாட்டின் முதல் நாள் அறிவிப்புகளில் மூன்று நாடுகளுக்கும் இடையிலான முறையான பாதுகாப்பு ஒப்பந்தம் சேர்க்கப்படவில்லை.

## சர்வதேச மற்றும் ... தொடர்ச்சி ...

நீண்ட இடைவெளிக்கு பின்னர் கிழக்கு மாகாணத்தில் இந்த சாதனை படைத்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு ஜே.கே. எம்.ஒ. கழகம் மற்றும் மட்டக்களப்பு விளை யாட்டுக்கழகம் ஆகியனவற்றின் சிரே ஸ்ட்ட போதனாசிரியர் எச்.ஆர்.சில்வா தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வி.ஈஸ்பரன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு விளை யாட்டுக் கழகத்தின் தலைவர் என்.கௌசி கன்,கழகத்தின் சிரேஸ்ட பயிற்சியாளர் பிரசாத் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சாதனை படைத்த வீரர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் அவர்களுக்கான கண் காட்சி பயிற்சியும் நடாத்தப்பட்டது.

## 13 ஐப் பயன் ... தொடர்ச்சி ...

தொடர்பான ஏமாற்று திட்டங்களே நாட்டில் இருந்தன. அத னையும் ஜனாதிபதி தற்போது புதுப்பித்துள்ளார். இதனால், ஜனாதிபதி மக்கள் ஆணையின்றி செய்து வரும் வேலைகளை உட னடியாக நிறுத்த வேண்டும்" என்று தெரிவித்தார்.

## நெடுங்கேணி ... தொடர்ச்சி ...

நோக்கம் யாரோ இவைகள் எல்லாம் திட்டம் போட்டு பெரியதொரு சிங்கள குடியேறத்தை இந்த நீர் தேவை அவர்களுக்கு தெரியாமால் இல்லை. அதை செய்து கொண்டு காலப்போக்கில் இந்த நீர் பற்றாக்குறை ஏற்படுகின்றது இந்த தொல்ழிச்சாலை இயங்காமல் போனாலும் அவர்கள் ஒன்றில் வெற்றி காண்பார்கள் இது நடந்தேறினால் சிங்கள குடியேற்றம் இங்கு வந்து சேரும்.

வடக்கு மாகாணத்தில் ஏற்கனவே மணலாறு பகுதியால் நாங்கள் கலங்கிக் கொண்டிருக்கின்றோம். உங்களுக்கு தெரியும் ஆரம்பத்தில் மணலாறில் *6904* பேர்தான் மக்கள் இருந்தவர்கள். இன்று *12186* மக்கள் அப்ப இப்படியே பெருக பெருக பெருக சிங்கள குடியேற்றம் அங்கு வந்து கொக்குழாயில் *375* குடும்பம் இப்படி எல்லாம் இருக்க இந்த பகுதியில் கொண்டு வந்து நீர் பற்றாக்குறை என்று சொல்லி தொழிச்சாலைகள் எல்லாம் மூடப்பட்டு விட்டாலும் சிங்கள குடியேற்றம் என்று கொண்டு வந்த குடியேற்றங்களுக்கு பாரிய வசதிகளை ஏற்படுத்தி கொடுத்து கடைசியில் வடக்கு மாகாணத்தின் மக்கள் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துகிறதுக்குரிய சதி வேலையை இன்றைக்கு எங்களுடைய ஆக்களே செய்யினம் என்பதைத் தான் உங்களுக்கு நாங்கள் சொல்லி வைக்க விரும்புகிறோம்.

**நாட்டில் தொடரும் வரட்சி காரணமாக விவசாயத்துறை பெருமளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கின்றது. சிங்களப்பகுதியில் விவசாயிகள் போராட்டங்களை முன்னெடுத்தும் வருகின்றார்கள். வன்னி பகுதிகளில் குறிப்பாக முல்லைத்தீவை பொறுத்த வரையில் வறட்சி எவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தி இருக்கிறது?**

ஆரம்ப கால கட்டத்தில் முல்லைத்தீவை வறட்சி முழுமையாக பாதிக்கப்பட்ட மாவட்டங்களுக்குள் உள்ளடக்கவில்லை. ஆனால் மிக மோசமாக முல்லைத்தீவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றது .

கால் நடைகள் ஆங்காங்கே இறந்து கிடப்பதை காணக்கூடியதாக இருக்கின்றது. குளங்கள் என்று சொல்லி வற்றாத குளங்கள் வற்றிக்கொண்டு போகின்ற நிலைமைகளை காணுகின்றோம். நீர் தேக்கங்கள் என்று இருக்க கூடிய இடங்கள் எல்லாம் நீர் வற்றிக் கொண்டுபோய் நீர் இல்லாமல் சரியான வறட்சியை காணக்கூடிய நிலை. குடிநீருக்கு கூட ஒரு சில இடங்களில் தட்டுப்பாடு. கடற்கரை ஓரம் தவிர்ந்த கூடுதலான இடங்கள் குடிநீர் தேவைக்கு பெரிய கஸ்ரப்படுகின்றார்கள். முல்லைத்தீவு மிக மோசமாக வறட்சியால் பாதிக்கப்பட்டு இந்த வறட்சியானது நெல் பயிர்ச்செய்கைகளுக்கு கூட மிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது அதேமாதிரி காய்கறிகள் தோட்டங்கள் செய்பவர்களுக்கு கூட மிக மோசமான நிலையை ஏற்படுத்துகின்றது. கால் நடை மட்டும் அல்ல இப்படி விவசாயம் செய்கின்றவர்களுக்கும் இந்த பாதிப்பு கடல் தொழிலாளர்களை தவிர மற்றையவர்களுக்கு இந்த வறட்சியானது மிக மோசமான பாதிப்பை முல்லைத்தீவிலும் ஏற்படுத்திக்கொண்டிருக்கிறது.

**இவ்வாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ஏதாவது வறிய நிவாரணம் ஏதாவது கிடைக்கின்றதா?**

ஒரு நிவாரணமும் இன்னம் கிடைக்கவில்லை. ஏதோ இலவசமாக கொடுகிற என்ற பசளையை எங்கு கொண்டு போடுவது என்று தெரியவில்லை. ஏன் என்றால் இந்த வறட்சி நிலமை இருக்கும் போது உங்களுக்கே தெரிகிறது நீர் இல்லாத நிலமை.ஆனால் நிவாரணம் பற்றி இன்னும் கதை இல்லை . ஆனால் நிவாரணம் வழங்குவதற்கு இடையில் மக்களுக்கு எந்தளவு நீர் பற்றாக்குறை ஏற்பட போகுது மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்படும் என்பது எல்லாருக்கும் தெரியும்.

அப்படியான காலத்தில் நாடு உண்மையில் இந்த மக்களின் தேவைகளை அதாவது பசி, பட்டினி, பஞ்சம் வரக்கூடிய நிலமை இருக்கின்றது. மிகக் கடுமையாக இப்படியே இருந்தால் அதற்கான மாற்று வழிகளை கண்டு பிடித்து செய்ய வேண்டும். ஆனால் இவர்கள் மாற்று வழிகளை கண்டு பிடிப்பதே இல்லையே. உங்களுக்கு தெரியும் 40 ம் ஆண்டில் இருந்து இன்று வரைக்கும் ஆட்சியாளர்கள்செய்து வந்தது நாட்டை மோசமான நிலைக்கு தள்ளிவிட்டது தான். தவிர நாட்டை வளர்ச்சிப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது என்று ஒருவராலும் சொல்ல முடியாது . அப்படி இருக்கும்போது இதற்கு எந்த திட்டமிடலை தீட்டப்போகிறார்கள் என்று தெரியாது. ஆனால் மக்கள் இப்படி வரட்சி கூடினால் மிகமோசமான நிலைக்கு பாதிக்கப்படுவார்கள் என்பது உண்மை. நாடு இதற்கு பொறுப்பு கூறவேண்டிய நிலையில் உள்ளது

**அரசாங்கத்தை தவிர பொது அமைப்புக்கள் ஏதாவது இவ்வாறான சூழலை கவனத்தில் எடுத்து ஏதாவது உதவிகளை வழங்குவதற்கு முன் வந்திருக்கின்றதா?**

சில சில அமைப்புக்கள் அவ்வாறான நடவடிக்கை தொடர்பில் ஆலோசித்து கொண்டிருக்கிறார்கள். என்னோடும் இது தொடர்பாகக் கதைத்தார்கள். ஆனால் அந்த வறட்சியால் பாதிக்கப்படும் மக்கள் அனைவருக்கும் அந்த பொது அமைப்புகள் உதவி செய்யும் என்ற நம்பிக்கை இல்லை.

இதற்கு அரசாங்கம் ஒரு சரியான திட்டமிடலை செய்யவேண்டும். இந்த வரட்சி நிலை நீடித்தால் இந்த மக்கள் யாரை நம்பி இருக்கிறார்கள். இந்த மக்களுக்கான வழிகளை சரியான முறையில் செய்ய வேண்டும் என்றுதான் நாங்கள் சொல்கின்றோம். ஆனால் அமைப்புகள் நீங்கள் சொன்ன மாதிரி முற்றுமுழுதாக இதை சீர் படுத்துவார்கள் என்று எதிர்பார்க்க முடியாது

• • •

## ஜெனிவாவில் ... தொடர்ச்சி ...

இனப்படுகொலைக்கு உரிய நேரத்தில் நீதியைப் பெறுகிற வாய்ப்பை இழந்திருக்கிறார்கள். உதவுகிறேன் - என்கிற போர்வையில் இந்தியா உபத்திரவம் செய்யாமலிருந்திருந்தால், தங்கள் அரசியல் விருப்பத்தை அவர்கள் எப்போதோ நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள். புவிசார் அரசியல் என்கிற இந்தியாவின் தகிடுதத்தத்தால், அவர்களது ஈழக் கனவு நிறைவேறாமலேயே இருக்கிறது.

ஹிந்தி பேசும் மக்களின் தொப்புள் கொடி உறவுகளாக ஈழ மக்கள் இருந்திருந்தால், அங்கே நடந்த இனப்படுகொலையை இந்தியா வேடிக்கை பார்த்திருக்குமா? மனித உரிமைகள் பேரவையில் கள்ள மௌனம் சாதித்திருக்குமா? இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை முறியடிக்க முயன்றிருக்குமா?

அடித்துக் கொன்று புதைக்கப்படும்
கடைசித் தமிழனின் கல்லறையில்
எழுதுங்கள்...

எங்களைக் கொன்றது எங்களது
தாய்மொழி....

என்கிற கோவை நண்பர் கருப்புசாமியின் தன்னிரக்கக் கவிதைதான் இப்போது நினைவுக்கு வருகிறது.

டெல்லியில் தர்பார்கள் மாறுகின்றன.... துரோகங்கள் தொடர்கின்றன. புனித மொழி என்று சிலர் பூஜிக்கிற ஒரு மொழி செத்துப் போனபிறகும், கடலுக்கு இருபுறமும் மனித மொழியான தமிழ் உயிர்ப்புடன் இருப்பதை அவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. தமிழீழக் கனவை நசுக்கிவிட வேண்டுமென்கிற அவர்களது நப்பாசைக்குக் காரணமே, அது தமிழுக்கான தேசமாகத்திகழும் என்கிற அச்சம் தான்!

இந்த வக்கிர மனோபாவத்தை மனத்துக்குள் மறைத்தபடியே, 'இலங்கையில் நடந்தது இனப்படுகொலை தான்' – என்று 14 ஆண்டுகளின் பின் முணுமுணுக்கிறார்கள். தமிழினப்படுகொலை குறித்து ஜெனிவாவில் பேசாமல், ராமேஸ்வரத்தில் பேசி என்ன பயன்? இதன் பெயர் நீலிக்கண்ணீரல்லாமல் வேறென்ன! காலங்கடந்த போலிக்கண்ணீராகவே இது கருதப்படும்.

ஒருவேளை இது அமித்ஷாக்களின் நிஜமான கண்ணீர் தானென்றால், 2024 இந்தியத் தேர்தலுக்கான பாரதீய ஜனதாவின் தேர்தல் அறிக்கையில் இது சேர்க்கப்பட வேண்டும். 'மீண்டும் பாரதீய ஜனதா ஆட்சிக்கு வந்தால், தமிழினப்படுகொலைக்குக் காரணமான பௌத்த சிங்கள ஆட்சியாளர்களையும் படையினரையும் சர்வதேச குற்றவாளிக் கூண்டில் நிறுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் துரிதகதியில் எடுப்போம்' – என்று ஸ்ரீமான் நரேந்திர மோடி பகிரங்கமாக அறிவித்தாரென்றால், ஒட்டுமொத்த உலகத் தமிழர்களும் அவரை மனமுவந்து பாராட்டுவார்கள். எதெதற்கோ ஏற்பாடு செய்கிற அமித்ஷா இதற்கு ஏற்பாடு செய்வாரா?

• • •

## மொறொக்கோ ... தொடர்ச்சி ...

மொறொக்கோ வீராங்கனைகள் தற்போது அடைந்திருக்கின்ற வெற்றி உலகளவில் கொண்டாடப்படுவதைப் பார்க்கின்ற குடும்பங்கள் தமது பெண்பிள்ளைகளை உதைபந்தாட்டப் பயிற்சிகளுக்கு அனுப்ப முன்வரக்கூடும். “இந்த வீராங்கனைகளில் உங்களுக்கு யாரை மிகவும் அதிகமாகப் பிடிக்கும்” என்று எட்டு வயது நிரம்பிய சாராவிடம் நான் கேட்டேன். “அவர்கள் எல்லோரையுமே பிடிக்கும்” என்று அவர் கூறினார். வருகிற வருடம் தானும் உதைபந்தாட்டப் பயிற்சியைத் தொடங்கவிருப்பதாக அவர் என்னிடம் கூறினார்.

உரிய முறையில் ஆதரவளிக்கப்பட்டால், பெண்களுக்கான விளையாட்டுகள், பெண்களைப் பொறுத்தவரையில் முன்னேற்றம், அபிவிருத்தி, வலுவூட்டல் போன்றவற்றை பெண்களில் தோற்றுவிக்கும் என்பதை உதைபந்தாட்ட மைதானத்திலும் சரி, அதற்கு வெளியேயும் சரி, மொறோக்கோவின் பெண்கள் அணி அடைந்திருக்கும் வெற்றி உலகுக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறது. கடந்த பத்து ஆண்டுகளில், உதைபந்தாட்ட மைதானங்கள், உதைபந்தாட்டப் பயிற்சிக் கல்லூரிகளில் மட்டுமன்றி பெண்களின் எதிர்காலத்துக்கும் முதலீடுகளை மேற்கொண்டிருந்தது. இந்த முதலீடுகள் அனைத்தின் விளைவுகளையும் மொறொக்கோ இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கிறது. மொறொக்கோவின் இந்த முன்னுதாரணத்தை ஏனைய நாடுகளும் நிச்சயமாகப் பின்பற்றுவது வரவேற்கத்தக்க விடயமாகும்.

***நன்றி: அல்ஜஸீரா***